Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 54

யாழ்ப்பாணம் பங்குனி 22 ஸபர் 8 திங்கட்கிழமை (5-4-71)

விஜயாஸ் நீலசோப்




மேலுறைகளை
சேர்த்து
அனுப்பி
பின்வரும்
பரிசுகளைப்
பெறுங்கள்

300 லேபலுக்கு 1 கண்ணாடி அல்லது
1 பியல் பேனா
50 லேபலுக்கு 1 சாக்குப்பை
25 லேபலுக்கு 1 மூவர்ணப் படம்

முருகானந்தா
குடிசைக் கைத்தொழிற்சாலை
முகமாலை எழுதுமட்டுவாள்.

# ஆஸ்பத்திரி வார்டுகளில் நோயாளர் முறைப்பாடு செய்ய குறிப்புப் புத்தகம்

## ஆஸ்பத்திரி குழு சிபார்சு

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலுள்ள ஒவ்வொரு வார்ட்டிலும் நோயாளி முறைப்பாடு புத்தகம் ஒன்று வைத்திருக்க வேண்டுமென்றும் நோயாளிகள் ஏதாவது முறைப்பாடு இருந்தால் அந்த வார்ட் தலைமை தாதியிடமிருந்து அப்புத்தகத்தைப் பெற்று முறைப்பாட்டை எழுத வேண்டுமென்றும் ஆஸ்பத்திரி கமிட்டியின், நோயாளிகள் நலன், வைத்திய விபரம் பற்றிய உபகுழு தீர்மானித்துள்ளது.

ஜனாப் எம். ஏ. சி. எஸ். ஏ. காதர் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் தினமும் நோயாளிகள் முறைப்பாடு புத்தகத்தை வைத்திய அத்தியட்சகர் பார்வையிட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நோயாளிகளுக்கு விசேஷமாகக் கொடுக்கப்படும் உணவு விபரங்கள் பற்றி அந்த வார்ட்டின் தலைமைத் தாதி அவ்வப்போது நோயாளிக்கு தெரியப்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

நோயாளிகள் நலன், வைத்திய விபரம் பற்றிய குழுத் தலைவர் ஜனாப் காதர் டாக்டர் பிலிப், மற்றும் உறுப்பினர்கள், பிரசவ வார்ட். ஆஸ்பத்திரி சமையல் பகுதி ஆகியவற்றை பார்வையிட்டனர்

## காங்கிரஸ் எம்.பி.க்கள் அரசில் சேர்ந்தனர்

கோட்டை, ஞாயிறு தமிழ்க்காங்கிரஸ் ஆட்சி மன்ற உறுப்பினர் மூவரும் இன்று அரசாங்க நாடாளுமன்றக் குழுவில் சேர்ந்து கொண்டனர்.

இன்று ஆட்சிமன்றத்தில் நல்லூர் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு சி அருளம்பலம் பேசுகையில், இந்த அரசாங்கம் இன, மத மொழி வேறுபாடில்லாது, எல்லா மக்களையும் சமத்துவத்துடன் நடத்தி வருகிறது. எல்லா மக்களுக்கும் பாரபட்சமற்ற முறையில் சோஷலிசத் திட்டங்களை இவ்வரசு நிறைவேற்றுமென்று கருதியே நாம் அரசில் சேர்ந்தோம் என்றார்.

## கொழும்பில் கவியோகி

வெள்ளவத்தை, ஞாயிறு ஈழத்தில் யோகசுவாமிகளின் குருபூசைகளில் கலந்து கொள்ளும் பொருட்டும் வேறு சமயச் சொற்பொழிவுகளில் கலந்து கொள்ளும் பொருட்டும் கவியோகி சுத்தானந்த பாரதியார் இம்மாதம் 2-ந் திகதி கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வந்துசேர்ந்த போது அவரை வரவேற்பதற்கு ஈழத்திலுள்ள யோக சுவாமிகளின் அடியார்களும் இன்னும் சைவ அன்பர்களும் திரளாக வந்திருந்தனர். கவியோகியார் தற்பொழுது வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மடத்தில் தங்கியிருக்கிறார். தமது கைப்பட எழுதிய 'மணிமேகலை' என்னும் நாடகத்தையும் யோகியார் கொண்டு வந்துள்ளார். கூடிய விரைவில் இலங்கை வானொலியில் அதை ஒலிபரப்பவிருப்பதாகவும் அந் நாடகத்தில் தாமும் பங்கேற்று நடிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## திருமதி கெனமன் காலமானார்

கோட்டை. ஞாயிறு வீடமைப்பு நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர் கெனமனின் பாரியார் திருமதி மோட். கெனமன் பிளவர் ரேட்டிலுள்ள தமது இல்லத்தில் நேற்றிரவு காலமானார்.

55வயதான இவர் 1952ல் திரு. பீட்டர் கெனமனை திருமணம் செய்துகொண்டார். வைத்திய சிகிச்சைக்காக மாஸ்கோவுக்கு சென்றிருந்த இவர் மூன்று வாரங்களுக்கு முன்னர் தான் கொழும்புக்குத் திரும்பினார், 'முன்னேற்றம்' என்ற ஆங்கில வாரப்பத்திரிகைக்கு ஆசிரியராகவும் கம்யூனிஸ்ட்கட்சி அங்கத்தவராகவுமிருந்து அரும்சேவைசெய்தார்.

## சிவபால யோகி மகராஜ் இந்தியா திரும்பினார்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கத்தின் அழைப்பின்மீது யழ்ப்பாணத்துக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டிருந்த சிவபால யோகி மகராஜ் சுவாமிகள் நேற்று மாலை இந்தியா திரும்பினார். மாலை 6 மணிக்குப் பலாலியிலிருந்து விமான மூலம் பிரயாணம் செய்த மகராஜ் சுவாமிகளைத் திவ்வியஜீவன சங்கப் பிரதிநிதிகளும் மற்றும் பிரமுகர்களும் விமான நிலயத்திற்கு வந்து வழியனுப்பி வைத்தனர். வைமன் வீதியிலுள்ள அருளகத்திலிருந்து பிற்பகல் 5 மணிக்கு சுவாமிகள் புறப்பட்டார்.

ஸ்ரீ சுவாமிகள் நேற்று முன்தினம் இரவு யாழ்: வைமன் வீதியிலுள்ள அருளகத்திற்கு வருகை தந்தார்.

சுவாமிகள் அங்கு விஜயம் செய்வதை அறிந்த அடியார்கள் அவரது தரிசனத்துக்காகப் பந்நூற்றுக் கணக்கில் அருளகத்தின் உள்ளேயும் வெளியேயும் மாலையிலிருந்தே திரண்டிருந்தனர் சுவாமிகள் சரியாகஇரவு 9-30மணிக்கு அருளகத்தை வந்தடைந்து தியானத்தின் பின் அடியார்களுக்குத் தரிசனமளித்தார்.

ஒரு கோவிலின் மிளிரும் அமைதியும் களையும் அந்த இல்ல மண்டபத்தில் நில

(4-ம் பக்கம் பார்க்க)

கட்டுபத்த பல்கலைக்கழகம்

## நிர்வாகத்தில் மாணவர்க்கும் முக்கிய பங்கு

கொழும்பு, ஞாயிறு 'கட்டுப்பெத்தையில் அமைக்கப்படவிருக்கும் புதிய தொழில் நுட்ப பல்கலைக்கழக நிர்வாகத்தில் மாணவர்களுக்கு முக்கிய பங்கு அளிக்கப்படும் இத்தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் சம்பந்தமான மேற்படி அம்சம் இடம்பெற்றுள்ளது.

இத்திட்டத்தின்படி மாணவர்சங்கத் தலைவர் கல்லூரியின் ஆளுநர் குழுவிலும் பல்கலைக்கழக செனற்றிலும் அங்கத்தவராக இருப்பார். செனட்சபை மேற்கொண்டும் மூன்று மாணவர்களைத் தெரிவுசெய்து அங்கத்தவராக்கிக் கொள்ளும். ஆளுநர்குழுவோ அல்லது செனற்றோ பரீட்சைகள் சம்பந்தமாக கூடி ஆலோசிக்கும் கூட்டங்களில் மாத்திரம் இந்த மாணவர்களை அனுமதிக்கமாட்டாது. கட்டுப்பெத்தை தொழில்நுட்பக் கல்லூரியில் தற்போது பயின்றுவரும் மாணவர்கள் புதிய பல்கலைக்கழகத்தில் அதே பாடங்களை தொடர்ந்து கற்க அனுமதிக்கப்படுவார்கள்.

புதிய பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களின் நிதி உதவி தேவைப்படுகிறவர்களிடமிருந்து கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

கடந்த ஆண்டு கட்டுப்பெத்தை தொழில்நுட்பக் கல்லூரியில் பலவசதிகளைக் கோரி மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கியதும் அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்றும் குறிப்பிடத்தக்கது.

(சி பி ஏ)

உலகில் எப்பகுதியானாலும்

## ரத்தக் களரி ஏற்பட்டால் கண்டித்தே தீருவோம்

### செனட்டில் குமாரசூரியா

கோட்டை, ஞாயிறு உலகில் எப்பக்கத்தில் இரத்தக்களரி ஏற்பட்டாலும் எமது அரசு அதைக் கண்டித்தே தீரும் எனத் தபால் தந்தி அமைச்சர் செனட்டர் திரு,செ குமாரசூரியர் கூறினார்

செனட்டில் இமக்குப் பாகிஸ்தான் விஷயத்தில் [illegible] என்ன என்று செனட்டர் திரு மு திருச்செல்வம் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே குமாரசூரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்குப் பாகிஸ்தானில் மட்டுமல்ல லாவோஸ் வியட் [illegible] ளும் போன்ற இடங்களில் ஏற்பட்டுவரும் ரத்தக்களரியை நாம் கண்டித்தே வருகிறோம். பாகிஸ்தான் விமானங்கள் இலங்கையின் ஊடாக இராணுவத்தைக் கொண்டுசென்றது என்ற குற்றச்சாட்டை அமைச்சர் மறுத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அரிசி மில்:
70 மூடை அரிசி கோட்டா, பிளாக்ஸ்ரோன் இஞ்சின் 26 HP, No 1, No 7, கல்லர், கிறைண்டர், அடுப்பு தளபாடங்களுடன் விற்பனைக்கு உண்டு. விபரம்: சி. இராசரத்தினம், அடைவுபிடிப்பவர், 5-ம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம். 2749

முந்திரியப்பழம்
இனிப்பு முந்திரியப்பழம் விற்பனைக்கு உண்டு. இ. தன ஞயகம், கெருடாவில் ரோட் தொண்டைமாறு. 2745

### தவறிவிட்டது

லைசென்ஸ்
ஆனைக்கோட்டையைச் சேர்ந்த க. கனகரெட்னம் என்பவருடையமோட்டார் சைக்கிள் லைசென்ஸ் 24-3-71ல் யாழ் பஸ்நிலையத்தில் தவறிவிட்டது அதைக் கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் கொடுக்கவும். 2748

## வீதி பஜனை செய்ய முடிவு

யாழ்ப்பாணம், திங்கள்
இம்மாதம் 8-ம் திகதி வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் ரதோற்சவத்தன்று காலை கோவில் வடக்கு வீதியிலுள்ள 85ம் இலக்க இல்லத்திலிருந்து பொ. பேரம்பலசாமியார் தலைமையில் ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் திருவுருவப்படத்தோடு வீதி பஜனை செய்வதென்று பஜனைக்கோஷ்டி முடிவுசெய்துள்ளது.

## இடமாற்றம்

கொடிகாமம், ஞாயிறு
உசன் இராமநாதன் மகா வித்தியாலய அதிபர் திருமதி ப சிவசங்கரன் அடுத்தமாதம் தொடக்கம் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்துக்கு அதிபராக எவரும் இதுவரை நியமனம்செய்யவில்லையெனத் தெரிகிறது.

## யோக சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம், திங்கள்
இன்று சிவதொண்டன் நிலையத்தில் யோகசுவாமிகள் குருபூசை கொண்டாடப்பட விருக்கிறது அபிஷேக ஆராதனையின்பின்னர் அடியார்கள் அன்பர்களின் பாதயாத்திரை காங்கேசன்துறை வீதி அரசடி வீதி வழியாக நல்லூர் கந்தசுவாமி கோவிலை அடைந்து அங்கிருந்து பருத்தித்துறை வீதி கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதி மாம்பழஞ்சந்தி இலந்தைக்குளம் வீதி வழியாகச்சென்று கொழும்புத்துறை ஆச்சிரமத்தை அடைந்து அங்குப் குருபூசை நடைபெறும் இறுதியில் மகேசுர பூசையும் இடம் பெறும்.

## புதிய ஜே. பி.

அரியாலை, திங்கள்
கோப்பாய் பகுதிவழக்கறிஞர் திரு சி' அமிர்தலிங்கம் புதிய சமாதானநீதவானாக யாழ்ப்பாணம்மாஜிஸ்திரேட் திரு கொலின் மென்டிஸ் முன்னிலையில் சத்தியப் பிரமாணம்செய்துகொண்டார்.

முந்திரிச் செய்கைத் திட்டம்

## பண்படுத்தத் தவறிய நிலம் பறி முதலாகும்

மாவிட்டபுரம், ஞாயிறு
'பூநகரியில் முந்திரிச் செய்கைக்கு வழங்கப்பட்ட காணியைப் பெற்றவர்கள் அவற்றை பயன்படுத்தாவிட்டால் அக்காணிகள் பறிமுதலாக நேரிடும்''
இவ்வாறு பூநகரியில் முந்திரிச் செய்கை குறித்து ஆராய நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவிக்கப்பட்டது.
யாழ்-மேலதிக அரசாங்க அதிபர் திரு ஏ யோசேப் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் காணி பெற்றவர்களும் கலந்துகொண்டனர்.
இக்காணிகளில் முந்திரிச் செய்கையால் கூடிய வருமானம் பெறலாம் என்றும் தாம் புத்தளத்தில் முந்திரிச் செய்கைபண்ணியதாகவும் அதிலும் கூடிய வருமானத்தை இந்தத்திட்டத்தில் பெறலாம் என்றும் டாக்டர் இரத்தினவேல் தெரிவித்தார்.
பிரஸ்தாப திட்டத்தில் காணி பெற்றவர்கள் தமது காணிகளை பண்படுத்தி முந்திரிச்செய்கைக்குநிலத்தைப் பண்படுத்திய பின் தான் விதை வழங்கப்படவிருப்பதாகவும் இத்துடன் மற்றும் வசதிகளும் வழங்கப்படும் என்றும் நிலத்தைப் பண்படுத்தாவிட்டால் அக்காணிகள் பறிமுதல்செய்யப்பட்டு வேறுஆட்களுக்கு வழங்கப்படும் என்றும் மேலதிக அரசாங்க அதிபர் கூறினார்.

இலங்கையில்

## லட்சம்பேருக்கு வேலைவாய்ப்பு: அமெரிக்க பேராசிரியர்கருத்து

கோட்டை, ஞாயிறு
'விவசாயத்துறையில் ஒரு லட்சம்பேருக்கு ஒருவருடத்தில் வேலைவாய்ப்புக் கொடுக்கமுடியும்' என இலங்கையில்விவசாயவிருத்தி மற்றும் வேலைவாய்ப்புகள் பற்றி ஆலோசனை தெரிவித்த அமெரிக்கப் பேராசிரியர் திரு. றெனி டியூமொன்ட் இங்கு தெரிவித்தார்.
விஞ்ஞான ரீதியிலான விவசாயத்துறைப் பேராசிரியரான இவர் மேலும் தெரிவித்ததாவது:
நெற்செய்கையால் மட்டுமன்றி றபர், தென்னை போன்ற பெருமளவில் பயன் தரக்கூடிய பயிர்களை உற்பத்தி செய்து ஈழம் பெரும் பயன் பெற முடியும். ஆபிரிக்க நாடுகள் நான்கு வருடத்தில் பயன் கொடுக்கும் தென்னைகளைப் பயிரிட்டு அதிக லாபம் பெறுவது போல் இலங்கையிலும் செய்ய முடியும். மகாவலியைத் திசை திருப்புவதன் மூலம் பெரும் அளவில் விவசாயம் விஸ்தரிக்கப்பட்டபோதிலும் சிறிய அளவில் விவசாயம் செய்வதை விட்டுவிடாது நெற்செய்கையில் அதிக விளைவு பெறத்தக்க முறைகளையும் கையாளவேண்டும்.

ஆரம்ப சங்கங்களின்

## நிர்வாகம் அரசாங்க ஊழியர்களிடம்

அம்பன், ஞாயிறு
தற்பொழுது பதிவு செய்யப்படும் ஆரம்ப சங்கங்களின் நிர்வாகப்பொறுப்பை சங்கத் தொடர்புடைய அரசாங்க ஊழியர்களேகவனிப்பார்கள் அத்துடன் நான்கு உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள் இந்த நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்."
இவ்வாறு பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை பட்டினசபை, குடத்தனைக் கிராமசபை எல்லைகளுக்குட்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பருத்தித்துறை ஆரம்பதாய்ச் சங்கத்துடன் பதிவு செய்யப் பட்டதையொட்டி நடைபெற்ற கூட்டத்தில் காரியாலயப் பரிசோதகர் திரு ரி முருகேசு தமது தலைமையுரையில் தெரிவித்தார்.
கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் இவ்வைபவம் நடைபெற்றது.
பருத்தித்துறைஆரம்ப சங்கத்தின் தனிக்கடன் எல்லையாக எட்டுலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. இக் கூட்டத்திற்கு மக்கள்வங்கிஊழியர். காரியாதிகாரி ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.
தலைவர் திரு ரி முருகேசு பேசுகையில் தற்பொழுது பதிவுசெய்யப்படும் ஆரம்ப சங்கங்களின் நிர்வாகப் பொறுப்பைசங்கத் தொடர்புடைய அரசாங்க ஊழியரே கவனிப்பார்களென்றும் அத்துடன் 4 உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள் இந்த நிர்வாகசபைக்குத் தெரிவு செய்யப் படுவார்களென்றும் இந்த நிர்வாகம் குறுகிய காலத்திற்கே இயங்குமென்றும் பின்னர் சங்கத்தின் அங்கத்தவர்களிடையேயிருந்து தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களையும் அரசாங்க ஊழியர்களையும் ஆணையாளர் நியமன அங்கத்தவர்களையும் கொண்ட 15 நிர்வாகசபை உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகசபை அமைக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

## 8 லட்சம் டாலர் யு. எஸ். உதவி

கொழும்பு, திங்கள்
800,000டாலர்கள் பெறுமதியான அமெரிக்க உதவி விஸ்தரிப்பு ஒப்பந்தமொன்றில் இலங்கை அரசாங்கமும் அமெரிக்காவும் இம்மாதம் முதலாம் திகதி யெழுத்திட்டன திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
1,000 யந்திர வள்ள மோட்டார்கள் டிரக்டர் உதிரிப்பாகங்கள், விவசாய யந்திரசாதனங்கள் மற்றும் தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான செம்புக்கம்பிகளை வாங்குவதற்கும் இந்த நிதி உபயோகப்படுத்தப்படும்
1969-ம் ஆண்டு கடனுதவி உடன்படிக்கை ஒன்றிற்கு திருத்தம் ஏற்படுத்தும் இந்த ஒப்பந்தத்தில் திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சின் அந்நிய மூலதனப் பிரிவின் நெறியாளர் திரு. திகா கப்பக்கொடவும் அமெரிக்க உதவி நிறுவனத்தின்இலங்கைப்பிரதிநிதிதிரு ஜோய் ஈ. ஜேம்ஸ் அவர்களும் கையெழுத்திட்டனர்.

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர்-யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ மாஸ்ரர் பிரபாகர்
★ பேபி சுமதி லட்சுமி
மனோரமா, வி.எஸ்.ராகவன், சுருளிராஜன்
சீர்காழி கோவிந்தராஜன்
நடிக்கும்
வா ராஜா வா
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சி
எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னு
நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை

இன்னும் சில தினங்கள் மட்டும்
கெப்பிட்டல் (கொழும்பு)
சிவாஜி காஞ்சனா
நடித்த
சிவந்த மண்

7-ம் திகதி முதல்
சினிமாஸ் திரைகளில்
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
நடித்த
மூன்றெழுத்து
(கலர்ப்படம்)

நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
அன்றுகண்டமுகம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
அன்பளிப்பு

இன்றுமட்டும்
வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30,
ராஜன் - சௌகார் ஜானகி
நடித்த
துணைவன்
தினசரி இரவு 10-00
எம்.ஜி.ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
சர்வாதிகாரி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ராஜேந்திரகுமார்-சயிராபானு
நடித்த
யுக்காயா ஆஸ்மான்
(கலர் - ஹிந்தி)

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30am & 4 15,p.m.
Spell Binding Suspence
Thriller
BANDITS in ROME
6-30, 10-00 மணி
சிவாஜி கணேசன்
சௌகார்ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்
(புத்தம் புதிய கொப்பி)

REGAL - Jaffna
Daily 4-45, 7& 9-45 p m
Poya days 4 Shows
Birth Rynolds
in
NAVAJO JOE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாஹ்யாவுக்கு சோவியத் அதிபர் வற்புறுத்து

# அடக்குமுறை அட்டூழியத்தை உடன் நிறுத்துங்கள்!

## பாக். விமானங்களுக்கு பர்மா எரிபொருள் வழங்காது

மாஸ்கோ, ஏப். -

**கிழக்குப்பாகிஸ்தானில் நடைபெறும் இரத்தக்களரியை உடன் ஒரு முடிவுக்கு கொண்டு வரும்படி சோவியத் அதிபர் பொட்கோர்னி பாகிஸ்தான் ஜனாதிபதி .ஜெனரல் யாஹ்யாகானுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.**

ஷேக் முஜிபுர் ரஹ்மானும் இதர கிழக்குப்பாகிஸ்தான் தலைவர்களும் கைதுசெய்யப்பட்டது குறித்து சோவியத் மக்களின் கவலையையும் அவர் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது. கிழக்குப் பாகிஸ்தானில் அடக்குமுறையை நிறுத்தி பிரச்னைகளுக்கு அரசியல் ரீதியில் தீர்வு ஒன்றைக்காணும்படி அதிபர் பொட்கோர்னி யாஹ்யாகானை வற்புறுத்தியுள்ளார். பாகிஸ்தானில் இடம் பெறும் சம்பவங்கள் பற்றி சோவியத் மக்கள் கவலை கொள்ளாமலிருக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ள அதிபர் பொட்கோர்னி அடக்குமுறைகளை நிறுத்தும் படியும் இரத்தம் சிந்தப்படுவதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும்படியும் கேட்டிருக்கிறார்.

சோவியத் ஆட்சிமன்றத்தின் சார்பில் திரு பொட்கோனி இந்தவேண்டுகோளை விடுத்திருக்கிறார். திரு. யாஹ்யாக்கானுக்கு இப்படி நேரடியாக வேண்டுகோள் விடுத்திருக்கும் 1வது வெளிநாட்டுப்பெருந் தலைவர் இவர் தான்.

கிழக்குப் பாகிஸ்தான் ராணுவ விமானங்களுக்கு எரிபொருள் வழங்குவதில்லையென்று பர்மிய அரசுமுடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது. பர்மிய அரசாங்கத்தின் இந்தமுடிவு கடந்த புதன்கிழமை தொடக்கம் அமுல் செய்யப்படுவதாக புதுடில்லியிலுள்ள பர்மிய தூதரக வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

கிழக்குப் பாகிஸ்தானில் பல நகரங்களில் பாகிஸ்தான் ராணுவ விமானங்கள் நேபாம் குண்டுகளை வீசி கடும் தாக்குதல்களை நடத்தி வருவதாக புதுடில்லிக்குக் கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. புஷேக்முஜிர் ரஹ்மான் ஆதரவாளர்களின் வசமுள்ள ஜெசூர் நகர் மீது ராணுவம் தூரத்திலிருந்து பீரங்கிகளால் தாங்கி வருகின்றனவாம்.

டின்பூரில் ராணுவத்தின் கடும் அட்டூழியங்களைப் புரிந்துள்ளதாகவும் இப் பகுதியில் 2 ஆயிரம் பேர் வரைச் சொல்லப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

டாக்காவில் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், ஆசிரியர்களின் விடுதிகள் போன்ற சகல கல்வி நிலையங்களையும் ராணுவத்தினர் தகர்த்து தரைமட்டமாக்கியுள்ளனராம். கிழக்குபாகஸ்கிதானிலிருந்து வெளியேறிவரும் அகதிகள் இந்தத்தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

### நியுயோர்க்கில் ஆர்ப்பாட்டம்

நியுர்யோர்க்கில் கிழக்குப் பாகிஸ்தானைச்சேர்ந்தசுமார் 200 பேர் பெறும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தினார்கள். கிழக்குப் பாகிஸ்தானில் தலையிட்டு ராணுவ ஆட்சியாளர் நடத்தும் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி அவர்கள் ஐ. நா. சபையைக் கேட்டுக் கொண்டார்கள் கிழக்குப்பாகிஸ்தான் நிலைமைபற்றி ஆராய பந்தோபஸ்து சபைகூட வேண்டும் என்றும் சுதந்திர வங்காள தேசத்தை அங்கீகரிக்க வேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள் கிழபாகிஸ்தான் நிலைமைகளை நேரில் ஆராயக்குழுவொன்று அனுப்பவேண்டும என்றும் அவர்கள் ஐ. நா. சபையைக்கேட்டுக் கொண்டனர்.

### இருதலைக் கொள்ளி எறும்பு?

கிழக்குப் பாகிஸ்தானில் பல நகரங்களும் ஷேக்முஜிபுர் ரஹ்மானின் ஆதரவாளர்களை நசுக்குவதில் ஈடுபட்டிருக்கும் ராணுவத்தினர் இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையிலிருப்பதாக சில செய்திகள் கூறுகின்றன.

ஷேக் முஜிபுர் ரஹ்மானைத் தேசத்துரோகி யென்று அறிவித்து கிழக்குப்பாகிஸ்தானில் ஆட்சியை நிலைநாட்டும் படி அதிபர் யாஹ்யாகான் ராணுவத்துக்கு உத்தரவிட்டு ஒரு வாரத்துக்கு மேலாகிவிட்ட போதிலும் இந்த நடவடிக்கை இப்பொழுதுதான் ஆரம்பமாவது போல் தோன்றுவதாக விஷயம் தெரிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

கிழக்குப் பாகிஸ்தானில் அடக்குமுறை நடவடிக்கைகளில் இறங்கியிருக்கும் ராணுவத்தினர் பெரும்பாலும் மேற்குப்பகுதியைச் சேர்ந்த பஞ்சாபிகளாவர். இவர்கள் நகரப்புறங்கள் மீது தம்கவனத்தைச்செலுத்தியதினால் கிராமப்பகுதிகளைக்கட்டுப் படுத்துவதற்கு போதிய பலமில்லாதவர்களாய் இருக்கிறார்கள் கிராமப் பகுதிகளில பரவலாகப் பிரிந்து நடவடிக்கைகளை ஆரம்பித்தால் ஆத்திரம் கொண்டுள்ள கிராமப்பகுதி மக்களின் எதிர்ப்புகளை சமாளிக்க முடியாமலிருக்கின்றது இதுவே இந்தப்படைகளை எதிர் நோக்கியுள்ள பிரதான பிரச்னையாகக் கூறப்படுகின்றது. அதேசமயம் மலைப்பகுதிகளும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளும் மிகுந்த இப்பகுதியில் ராணுவத்தினருக்குப் போதிய போக்குவரத்துத் தொடர்பு வசதிகளும் கிடைப்பதாகஇல்லையாம். இன்னும் சிலவாரங்களில் இங்கு பருவ மழை பெய்ய ஆரம்பித்தால் இந்த நிலைமை இன்னும் மோசமாகிவிடலாம். ஆறுகள் பெருக்கெடுத்தோட ரம்பிப்பதோடுராணுவமும்ஆங்காங்கே சிதறிப் போகக் கூடும்.

......

### இலங்கை விஞ்ஞானியின் தொண்டு

லண்டன், ஏப். 4

பிரபல இலங்கை விஞ்ஞானியான டாக்டர் என். சி. விக்கிரமசிங்கா விண்வெளி விஞ்ஞானத்துறைக்கு பெருந்தொண்டாற்றி வருகிறார் 1963-ம் ஆண்டில் இருந்து கேம்பிரிஜ் சர்வகலாசாலையில் பணியாற்றி வரும் இவர் சூரிய மண்டலத்திற்கு அப்பாலான பிரபஞ்ச வெளிசம்பந்தப் பட்ட பிரச்னைகளை ஆராய்ந்து அருந்தொண்டாற்றி வருகிறார். இவர்பிரிட்டிஷ் வானசாஸ்திர நிறுவனத்தின் அங்கத்தவராவார்.

......

### அதிபர் இடமாற்றம்

பருத்தித்துறை ஞாயிறு உசன் மகாவித்தியாலய அதிபர் திருமதி பர்வதவர்த்தனி சிவசங்கரம் சாவகச்சேரி உயர்தர மகளிர் கல்லூரி அதிபராக மாற்றப்பட்டுள்ளார்.


......

### உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

நாளை கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்,


SONY®
2R-29




ஸோனி பாக்கெட் ட்ரான்சிஸ்டர் ரேடியோ
சிடில்ஸ் சினிரேடியோ
9, 10, கொன்சிஸ்டரி கட்டிடம்,
பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.
தொலைபேசி 27311
கிளைகள் கண்டி, யாழ்ப்பாணம், கம்பஹா, அம்பலாந்தோட்டை, பம்பலப்பிட்டி

இதோ! ரேமியா பரவசமூட்டும் ஓர் புதிய பவுடர்!

பசுமையும் நீடிக்கும் சுகந்தமும் கொண்ட ரேமியா,
விசேஷ முறையில் வாசனையூட்டப்பட்ட டால்க்.
மேலோங்கும் அழகுருவளிக்க உடலெங்கும் முகத்திலும் ரேமியா தடவுக!



சிறப்பறிய, இன்றே ஒரு டின்
ரேமியா
வாங்குக!
எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.
விலை. ரூ. 2/35




ஓர் ரெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நமது உள்ள உணர்ச்சிகள் நெருப்பையும் தண்ணீரையும் ஒத்துள்ளன அவை நல்ல பணியாட்கள், ஆனால் கொடிய தலைவர்கள்

— சர் ரோசர்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம்
22ந் திகதி (5-4-71)

## தட்டிக் கழிப்பதற்கு தண்டனை

அன்றையவேலையை அன்றைக்கே செய்து முடிக்க வேண்டுமென்றும் தங்களுக்குரிய வேலையைச் செய்துமுடிக்காமல் தட்டிக்கழித்து வீண்பொழுது போக்கும் அரசாங்க ஊழியர் அதற்கான தண்டனையை அனுபவிக்க நேரிடுமென்றும் நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா அரசாங்க ஊழியருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். அரசாங்க காரியாலயங்களில் காற்ருடியின் கீழ் அமர்ந்துள்ள அரசாங்க ஊழியருக்கு மட்டுமல்ல வெளியில் சென்று வேலை பார்க்கும் அரசாங்க ஊழியருக்கும் நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் வருங்காலப் பிரஜைகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கும் ஏன் தனியார்துறை ஊழியர்களுக்கும் கூட இந்த எச்சரிக்கை பொருந்தும்.

இதேசமயம் வடபகுதி வித்தியாதிபதி திரு. மகாலிங்கம் சில தினங்களுக்கு முன் ஆசிரியசங்கத்தூதுக் குழு முன் பேசுகையில், ஆசிரியர்கள் பலரும் தமது சொந்த நலனையே கருதுவதாக கிளிநொச்சி. ஊர்காவற்றுறைப் பகுதிகளில் பல பாடசாலைகள் மூடப்படும் நிலையிலிருப்பதாகவும் ஆசிரியர்கள் தேசியரீதியில் சிந்தித்துச் செயலாற்ற முன்வர வேண்டுமென்றும் குறிப்பிட்டிருப்பதையும் இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமாகும்.

கூட்டணியினர் ஆட்சிக்கு வந்தநாளிலிருந்து சோஷலிஸத்தை அடைவதற்கு கடும்உழைப்பு அவசியமென்பதை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வலியுறுத்தி வந்திருக்கின்றனர்.

கடும் உழைப்பு என்பது வயலிலும் ஆலையிலும் உள்ளவர்களுக்குத் தான் நமக்கல்ல என்ற தவருன கருத்து அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் பல ஊழியர்கள் மத்தியிலும் ஆசிரியர்கள், தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் பலரின் மனதிலும் நிலவுவதாகத் தோன்றுகிறது.

அரசாங்க சேவையில் உள்ளவர்கள் (எல்லோரும் அல்ல) அசமந்தப்போக்கிற்குப் பெயர் பெற்றவர்கள். சாதாரண மக்களின் கேள்விகளுக்குக் கூட அவர்கள் சரியாகப் பதில்சொல்லமாட்டார்கள். அரசாங்க ஊழியர்கள் மக்களின் ஊழியர்கள் என்பதை அவர்கள் மறந்துவிடுகிருர்கள். நாட்டின் வருமானத்தில் அறுபதுசதவீதம் அரசாங்க ஊழியர்களுக்குச் செலவிடப்படுகிறதென்பது புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கும் தகவல். இது உண்மையானுல் இவ்வளவு பணம் செலவிடப்பட்டும் அரசாங்க ஊழியர் அந்த அளவுக்குத் தமது கடமையைச் செவ்வனே செய்கிருர்களா என்று கேட்பதில் நியாயமிருக்கிறது.

அரசாங்க அலுவலகங்களில் சரியாகவும் ஒழுங்காகவும் வேலைநடைபெற்ருல் ஆலையிலும் வயல்களிலும் உற்பத்தி பெருகும். ஆலைகளிலும் வயல்களிலும் நடைபெறும் வேலைகளுக்கு அடிப்படையும் ஆதாரமும் அரசாங்க அலுவலகங்களில்தான் உருவாக்கப்படுகிறதென்பதை மறந்துவிடக்கூடாது.

இதேபோலத்தான் நாட்டின் முன்னேற்றத்துக்கான கல்வித்திட்டம் அமைத்து அதைச் சரியான முறையில் செயல்படுத்தி நாட்டின் வருங்காலப் பிரஜைகளை உருவாக்கும் பெரும் பொறுப்பு ஆசிரியர்களிடம் இருக்கிறது. ஆசிரியர்கள் ஏனோதானோ என்ற மனப்பான்மையுடன் நடந்துகொண்டால் நாட்டின் இன்றைய நிலையைவிட வருங்காலம் மிக மோசமானதாகிவிடும்.

அன்றைய வேலைகளை அன்றைக்கே முடிக்கத் தவறும் அரசாங்க ஊழியர்களுக்குத் தண்டனை விதிப்பதென்ற நிதிமந்திரியின் திட்டம் செயல்படுத்தப்பட்டால் வேலைகள் சீராக நடைபெறுவதுடன் வேலையைத் தட்டிக்கழித்து சும்மா இருந்து சுகம் காணும் ஊழியர்கள் வெளியேறி, மிகக் குறைந்த ஊழியர்களுடன் சிறந்த சேவைசெய்யும் அரசாங்க அலுவலகங்களையே இங்கு காண்பதற்கும் வழிபிறக்கும் அரசாங்க ஊழியர்கள் விஷயத்தில் மட்டுமல்ல ஆசிரியசேவையிலும் தனியார்துறையிலும் கூடத் தங்கள் தங்கள் வேலையைச் சரிவர அன்றன்றைக்கே செய்துமுடிப்பதற்கான திட்டம் கொண்டுவரப்பட்டால் தூரத்திலிருக்கும் சோஷலிஸம் விரைவில் பயனளிக்கத் தொடங்குமென்று நிச்சயமாக நம்பலாம்.

## சிவபால யோகி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வியது. அடியார்கள் மிக்க அடக்கத்துடனும் பக்தியுடனும் சுவாமிகளைத் தரிசித்து விபூதி பெற்றுக்கொண்டனர். நோயாளிகளும் மற்றும் மனக்குறையுள்ளோரும் சுவாமிகளிடம் தமது துன்பங்களை எடுத்துச் சொல்லி ஆசீர்வாதம்பெற்றனர். அருளகம் இல்லத்தவர்களான திரு. சூரசங்கரன் தம்பதிகளும் மற்றும் திவ்வியஜீவன சங்கப் பிரமுகர்களும் சுவாமிகளின் நலன்களைக் கவனித்தனர்.

மகாராஜ் சுவாமிகள் நேற்றுப் பகல் கொக்குவில் புதுக்கோவில் முருகன்பதியில் பக்தர்களுக்கு ஆசி வழங்கினுர்.

ஆயிரக்கணக்கான அடியார்கள் இங்கு சுவாமிகளை தரிசிப்பதற்காகக் குழுமியிருந்தனர். அனைவருக்கும் விபூதி வழங்கி சுவாமிகள் ஆசீர்வதித்தார்.

### பருத்தித்துறை தேர்தல் ஆட்சேப வழக்

# "திரு. நடராஜா முற்றிலும் வெளிப்படையாகப் பேசவில்

## வழக்கறிஞர் வாதம்

கொழும்பு, ஞாயிறு பருத்தித்துறைத் தேர்தல் ஆட்சேபனை மனு மீதான விசாரணை நேற்றுக் காலை மீண்டும் நீதியரசர் திரு. எஸ் ஆர் விஜயதிலகா முன்னிலையில் ஆரம்பமான போது, எதிர்மனுதாரரான திரு கே துரைரத்தினத்தின் வழக்குரைஞரான திரு. என் சத்தியேந்திரா தனது தொகுப்புரையை ஆரம்பித்து நிகழ்த்திஞர்.

திரு என் சத்தியேந்திரா தனது தொகுப்புரையில் கூறியதாவது:

1970-ம் ஆண்டு மே மாதம் 9-ம் திகதி வல்வெட்டித்துறையில் நடைபெற்ற கூட்டமொன்றில், திரு நடராசாவின் தேர்வைப் பாதிக்கக்கூடிய வகையில் இரண்டாவது எதிர்மனுதாரரான செல்வி மனோரமா அவதூருகப் பேசியதாகக் குற்றஞ்சாட்டி தேர்தல் சட்டத்தின் கீழ் அதனை அடிப்படையாக வைத்தே இந்தத் தேர்தல் ஆட்சேபனை மனுவை ஆசைப்பிள்ளை திருநாவுக்கரசு என்பவர் 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் திகதி தாக்கல் செய்திருக்கிருர்.

இரண்டாவது எதிர் மனுதாரான செல்வி மனோரமா அவர் பேசியதாகச் சொல்கிறபடி பேசியிருந்தால் தேர்தல் சட்டம் ஒருபுறமிருக்க குற்றஇயல் சட்டத்தின்படியும் சுயேட்சையாகத் தண்டிக்கப்படக் கூடியவர் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே இப்படியான ஒரு குற்றச்சாட்டை அடிப்படையாக வைத்து தேர்தல் ஆட்சேபனை மனுவைத் தாக்கல் செய்திருக்கின்ற மனுதாரர் தன்னுடைய கட்சியை தனது மனுவுக்குஅடிப்படையான குற்றச்சாட்டினை சந்தேகமற நிரூபிக்கவேண்டிய கட்டுப்பாடுடையவராவர். இவரது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அதைத் தொடர்ந்து இரண்டாம் எதிர் மனுதாரரைப் பொறுத்த மட்டில் பாரதூரமான விளைவுகள் ஏற்படக் கூடுமாகையால் அவர் அவரது மனுவுக்கு ஆதரவான குற்றச்சாட்டினை குற்ற இயல் வழக்கினைப் போல சந்தேகமற நிரூபிக்க வேண்டும்- பொதுநன்மையைக் கருதி தக்கஆதாரமின்றி பொதுத் தேர்தல் முடிவுகளில் நீதிமன்றமும் தலையிடலாகாது. என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

செல்விமனோரமா பேசியதாகக் குற்றம் சுமத்தப்படுகின்ற பேச்சில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் உண்மைதானு அல்லவாஎன்பது ஒருபுறமிருக்க அந்தப் பேச்சை அவர் பேசினுர் என்பதை முதலில் மனுதார் திட்டவட்டமாக சந்தேகமாக நிரூபித்தாக வேண்டும்.

இந்தப் பின்னணியில், இந்த வழக்கில் மனுதாரின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள சாட்சியங்களையும் ஆராய்ந்து மனுதார் தனது வழக்கை நிரூபிக்கவில்லைஎன்பதே எனது வாதமாகும்.

தேர்தல் சட்டத்தின்படி சட்டவிரோதச் செயல்களில் எதிர்மனுதார் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டால் குற்றம் சுமத்தப்பட்ட சட்ட விரோதமான செயல்பற்றிய விபரங்களையெல்லாம்கொடுத்து சத்தியக் கடுதாசியொன்றும் மனுவுடன் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

இதன்படி இந்த மனு சம்பந்தப்பட்ட மட்டில் சட்டவிரோதமான செயலான மனோரமாவின் பேச்சை நேரில் கேட்டதாகச் சொல்கின்ற மனுதார் ஜூன் மாதம் 18-ம் திகதி தேர்தல் ஆட்சேப மனுவை தாக்கல் செய்தபோதுதான் மனோரமாவின் பேச்சைக் கேட்டது பற்றியோ அதுசம்பந்தமான எந்தத் தகவலையும் அளித்தோ சத்தியக்கடுதாசியில் கையெழுத்திடவில்லை என்பதை நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

என்ன காரணத்தினுலோ தான் கண்டதாகவும்கேட்டதாகவும் சொல்கின்ற சம்பவத்தைப்பற்றி சத்தியக் கடுதாசியில் கையெழுத்திட மனுதார் இசையவில்லை.

ஈஸ்வரலிங்கப் பெருமாள் என்ற சாட்சிக்குச் சின்னம்மை கண்டிருப்பதாக மருத்துவச் சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டவுடன் தான் மனுதார் சாட்சியமளிக்க முன்வந்திருக்கி[illegible]ர்.

9-ம் திகதிக் கூட்டத்தில் நடந்தவை பற்றி சத்தியக் கடதாசியில் கையெழுத்திட துரைசாமியைக் கொழும்புக்குத் தேடிவந்து; தேடியலைந்து கஷ்டப்பட்டதையெல்லாம் இந்தப் பின்னணியில் வைத்துப் பார்க்க நான் விரும்புகிறேன்.

திரு நடராசா உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவர். அவர் இந்த வழக்கு சம்பந்தமாக சாட்சிக் கூண்டில் ஏறி சாட்சியமளித்தபோது முற்றிலும் வெளிப்படையாகப் பேசவில்லை என்று மட்டுமஇப்போதைக்கு கூறி. அவரது சாட்சியத்தின் தாரதம்மியம்பற்றி பின்னர் ஆராய்கிறேன்.

என்னுல் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட[illegible] ஆட்சேபனை மனு மனுதாரால்தான் தாகல் செய்யப்பட்டதென்றும்தனக்கும் இதற்கும் தொடர்பு ஏதுமில்லை என்றும் சாட்ட முற்பட்டார். திரு நடராசா இதனைச் சரியானதென நாம் ஏற்றுக்கொண்டு பார்த்தால் நடராசாவை முதன் முறையாக மனுதாரரான திருநாவுக்கரசு சந்தித்தபோது வல்வெட்டித்துறைக் கூட்டத்தில் தானும் இருந்ததாக அவரிடம் கூறவில்லை என்பதை நான் இங்கு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

துரைசாமியின் சாட்சியத்தை ஆராய்ந்து பார்த்தால் அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒருமுறையேனும் அர்ச்சுனராசாவின் கொலை பற்றிய விஷயம் 1970 தேர்தல் ஒரு பிரச்னையாக தமிழரசுக்கட்சி மேடைகளில் பெரும்பாலும் பேசப்பட்டு வந்த பிரச்னையாக இருந்ததாகக் கூறவேஇல்லை.

துரைசாமி தமிழரசுக் கட்சிக் கூட்டங்களுக்குத்தமிழ்க் காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களுக்கும் போய் வந்தவர் என்பது இரு தரப்பாரும் ஏற்றுக் கொண்டதாகும்.

அப்படியான அவர்கூட அர்ச்சுனராசாவின் கொலை ஒருபுறமிருக்க, அர்ச்சுனராசாவின் பெயரோ, அவர் தமிழரசுக்கட்சிக்குச்செய்தசேவைகள் பற்றியோ. அர்ச்சுனராசாவோடு சம்பந்தப்பட்ட வேறு விஷயங்கள் பற்றியோ எந்தக் கூட்டத்திலும் பேசப்பட்டதாகக் கூறவில்லை

மே மாதம் 9-ம் திகதி கூட்டத்தில் அர்ச்சுனராசாவைப் பற்றி முதலாவது எதிர்

மனுதாரர்
ஏதாவது பே
நேரடியாக
துரைசாமி
பதில் தந்தா
யாராவது
வின் ெ
அன்றி, அ
பெயரையா
ஸித்து பேசி
கேட்டதற்கு
பதிலளித்தா
முதலாவது
ரர் செல்வி
பேச்சைப்ப
கின்போது
என்று
இல்லை எ
தார்.
இந்தப்பி
சுனராசாவி
புராங்கு அ
பட்ட ஏப்ர
பெப்ரவரி 1
டங்களைப் ப
மளிக்க ம
கள் பாலை
வில்லை
சுட்டிக்
தக் கூட்ட
சியமளிக்க
அவரது சா
வில் சேர்
னும், அவர்
பில் சாட்சி
அழைக்கவி
திரு நட
பரசாவர்க
கேட்டபோ
கூட்டத்தில்
சுனராசாவி
தன்னைச்
எதிர்தரப்பி
யில்லை என்
தார்.
இதன்படி
தமிழரசுக்
வாக நட
தனையோக
பொது கூ
9ம்தி கூ
அதுவும் இ
ரமாமட்டு
நிமிடங்கள்
வோடு ஏ
சம்பந்தப்ப
வேசியிருக்
ந்து அ
கொலையே
தப்பட்ட
லில் பிரச்
கொள்ளப்
பது புலன்
அர்ச்
கொலை
சம்பந்த
யாகதே
கள் என்
தாகவ
ரரோ
களோ
வும் செ
அர்ச்சு
வுடலின்
கட்சி செ
பட்டிருந்
ந்தே இதன்
கருதிப்
தாக ம
வழக்கறி
வழக்கில்
யாகக் குற்
நபருக்கா
டியிருப்ப
தியான உ
தியில் தம
பின் மூன்
யிட்டவர்
யோடு சே
இனம்கா
அதோடு
குற்றவா
ஒ ப்புக்
இப்படியி
யினைத் த
சியல் ல
படிட பயல்
9ம் தி

## ஒரு நாமம் ஒருருவம் ஒன்று மிலான்

### நேரிசை வெண்பா

ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலான் நல்லூர்க்
குருவாக வந்து குறைதீர்த்தான் — வருவாரை
வையாமல் வைது வரந்தருவான் நாமெல்லாம்
உய்யாமல் உய்வோம் உவந்துன
சிவமே நாமாமென்று சிந்திக்கச் சீரார்
சிவமே நாமென்று தெளிவோம் — அவமே
மனமே யுடன் போகும் மற்றுமோர் தெய்வம்
கனவிலும் எண்ணுது காண் செல்வன்

### செல்வன்

ஒரு பொல்லாப்பு மில்லை யென்று சொல்வான் —
செல்வன்
உல்லாசமாகவே நல்லூரிற் செல்வான்
குருசீடர் முறையொன்றுமி கொள்வான் —
செல்வன்
குணுதின ஞெருவரையும் கும்பிட்டு நில்லான்
அரு வென்றும் உருவென்றும் சொல்லான் —
செல்வன்
ஆரறி வா ரென்ற தட்டியே சொல்வான்
வருவாரைப் போவாரைத் தெருவில் —
செல்வன்
வைவான் சிரிப்பான் மகிழ்ச்சி தருவான்
மரு மத்தில் மருமமாயிருப்பான் — செல்வன்
மாதவரு மதியரும கத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

…வழக்கு

…லும்

…இல்லை"

…னுதாரர் துரைரத்தினம்) …ராவது பேசினாரா? என்று …ரடியாகக் கேட்டபோது. …ரைசாமி இல்லை என்றே …தில் தந்தார்.

…யாராவது அர்ச்சுனராசா …ன் கொலையைப்பற்றி …ன்றி, அர்ச்சுனராசாவின் …பயரையாவது உபயோ…த்து பேசினார்களா என்று …ட்டதற்கு இல்லை என்று …திலளித்தார்.

…முதலாவது எதிர்மனுதா… செல்வி மனோரமாவின் …பச்சைப்பற்றி தனது பேச்…போது குறிப்பிட்டாரா …ன்று …கேட்டபோதும் …ல்லை என்றே பதிலளித்…ார்.

இந்தப்பின்னணியில் அர்ச்…னராசாவின் பெயரில் …ரங்கு அமைத்து நடத்தப்…ட்ட ஏப்ரல் 22-ம் திகதி …ப்ரவரி 19ம் திகதி கூட்…ங்களைப் பற்றிச் சாட்சிய…ளிக்க மனுதாரர் சாட்சி… யாரையும் அழைக்க…ல்லை …பதையும் இங்கு …ட்டிக்… …ட்டவேண்டும். இந்… கூட்டங்கள் பற்றி சாட்…யமளிக்கக் கூடியவர்களை …வரது சாட்சிகள் பட்டிய…ல் சேர்த்திருந்தார் எனி…னும், அவர்களை அவர் சார்…ல் சாட்சியமளிக்க ஏனோ …ழைக்கவில்லை.

திரு நடராஜாவிடம் நீதி…ரசரவர்கள் கேள்வி ஒன்று …கட்டபோது, 9ம் திகதி …ட்டத்தின் பின்னர், அர்ச்…னராசாவின் கொலையோடு …ன்னைச் சம்பந்தப்படுத்தி …திர்தரப்பினர் பேசவே …ல்லை என்று பதில் அளித்…ார்.

இதன்படி பார்த்தால் …மிழரசுக்கட்சிக்கு ஆதர…ாக நடத்தப்பட்ட எத்…னையோ கூட்டங்களில் ஒரே …யாரு கூட்டத்தில்மட்டும் …ம்தி… கூட்டத்தில்மட்டும் …துவு இந்தச் சிறுமி மனோ…மாமட்டும் இரண்டு மூன்று …மிடங்கள் அர்ச்சுனராசா…வோடு ஏதோ ஒருவகையில் …ம்பந்தப்பட்ட பேச்சினைப் …சியிருக்கிறாள் இதிலிரு…து அர்ச்சுனராசாவின் …கொலையோ அவர் சம்பந்…தப்பட்ட எதுவுமே தேர்த…லில் பிரச்னையாக எடுத்துக் …கொள்ளப்படவில்லை என்…பது புலனாகிறது.

அர்ச்சுனராசாவின் கொலையை அரசியலோடு சம்பந்தப்படுத்தி பிரச்னையாகத்தேர்தலில் பேசினார்கள் என்று சொல்லமுடியாதாகையால்தான் மனுதாரரோ அவரது சாட்சிகளோ அதனைப்பற்றி எதுவும் சொல்லவில்லை.

ஆர்ச்சுனராசாவின் பூத…வுடலின் மீது தமிழரசுக்…கட்சி கொடி போர்த்தப்…பட்டிருந்ததால் அன்றிலிரு…ந்தே இதனை அரசியல் லாபம் …கருதிப் பாவிக்கப்பார்த்த…தாக மனுதாரர் தரப்பு …வழக்கறிஞர் கூறினார். இந்த …வழக்கில் மூன்றாவது எதிரி…யாகக் குற்றம்சுமத்தப்பட்ட …நபருக்காக ஆஜராகி வாதா…டியிருப்பவர் அடுத்த தொகு…தியான உடுப்பிட்டித்தொகு…தியில் தமிழரசுக்கட்சி சார்…பில் மூன்றுமுறை போட்டி…யிட்டவர். தமிழரசுக் கட்சி…யோடு வெளிப்படையாகவே …இனம்காட்டிக்கொண்டவர். …அத்தோடு, மூன்றாவது எதிரி …குற்றவாளி என குற்றத்தை …ஒப்புக் கொண்டிருக்கிறார். …இப்படியிருக்க இந்தக்கொலை…யினைத் தமிழரசுக்கட்சி அர…சியல் லாபத்துக்காக எப்…படிப் பயன்படுத்த முடியும். …9ம் திகதிக் கூட்டத்தில்

# உண்டு உடுத்து உலகத்தோர் போல் திரியும் தொண்டர்

**யோக**சுவாமிகள் மிகப் பெரிய துறவியாகவிளிருந்த போதும் அவர் ஒரு மிகச் சாதாரண மனிதரைப்போலவே வாழ்ந்தவர். துறவி என்று சாயவஸ்திரம்தரித்து கமண்டலம் ஏந்தியதில்லை. சாதாரண மனிதனைப்போன்றிருக்கவே அவர் விரும்பினார். உண்டு உடுத்து உலகத்தோர் போல் திரியும் தொண்டர் யோகசுவாமிகள், அவர் ஒரு முழுமையான சந்நியாசி.

நாளையைப்பற்றி என்றும் சிந்தியாதவர். அவர் வானத்தில் இறக்கையடித்துப் பறக்கும் பட்சிகளைப்போலவும் மண்ணிலே பூத்துக் குலுங்கும்வில்லிப் பூக்களைப் போலவும் நாளையைப்பற்றி என்றும்சிந்தியாதவர் அவர். ஆயினும் நாளைக்குரிய எல்லாமே அவருக்கு குறைவின்றிக் கிடைத்து வந்தன. சுவாமிகளது அடியார்கள் இவர் தேவைகளைப் பூர்த்தி செய்தனர்.

யோக சுவாமிகள் ஒரு மௌன ஞானியாவார். வர்ணிக்கமுடியாத பரம்பொருள் ஒன்று மட்டுமே உண்மையெனக் கருதி வாழ்ந்தவர். அவர் அகத்தின்கண் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்த ஆன்ம ஒளி முகத்தின் வழி பலரை ஈர்த்தது. அவர்களில் அநேகர் சுவாமிகளைக் காணுதிருக்கவும் மறவாதிருக்கவும் முடியாதாராயினர். நேரடியாக அவருடன் பழகியவர்களில் அநேகர் வாழ்வில் மிக உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர். வாழ்க்கையில் கஷ்டதுன்பமென்றால் என்னவென்று அறியாதவர் மக்கள் தொண்டராக மாறினர். கல்வி சமயம் மற்றும் பொதுச்சேவைகளில் அவர்கள் ஈடுபட்டு உழைத்தனர்.

## செல்லப்ப சுவாமிகள்

செல்லப்ப சுவாமிகளே தமது தவவாழ்வுக் காரணராயிருந்ததாக யோகசுவாமிகள் சொல்லுவார், செல்லப்ப சுவாமிகளைப் பற்றி பேச ஆரம்பித்தாய் மிக்க உணர்ச்சியுடன் சுவாமிகள் பேசுவார். நல்லைத் திவ்ய பதியில் சுவாமிகள் தமது குருநாதரைக் கண்டுகொண்ட கதையை அவர் உணர்ச்சியுடன் சொல்லும்போது கேட்பவர்க்கும் உணர்ச்சிமேலீட்டால் மெய் சிலிர்க்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் முன்னே தேர்முட்டியில் இருள்நிறைந்த இரவில் தமது குருநாதரைக் கண்டுகொண்டாராம். எரிகின்ற சுடர் போன்று எவரையும் ஆகர்ஷிக்கும் ஆன்மீகத் தோற்றத்தையுடைய செல்லப்ப சுவாமிகள் ஒரு பித்தனைப்



[கொழும்புத்துறை யோகசுவாமிகளின் குருபூசை இன்று. (தோற்றம் 9-5-1872. சமாதி 23-3-1964) சுவாமிகளுடன் மிக நெருங்கிப் பழகியவர்களுள் காலஞ்சென்ற கல்விமான் திரு: ஏ. ஈ. தம்பரும் ஒருவர். சுவாமிகளைப்பற்றி திரு தம்பர் எழுதி வைத்துச்சென்றுள்ள கட்டுரையின் ஒரு பகுதி இங்கு வெளியிடப்படுகிறது.]

போன்றே காணப்படுவாராம். அவரைக் கண்ட நாள்முதலாய் யோகசுவாமிகளது உடலையும் உயிரையும் அவர் தப்வசப்படுத்திக்கொண்டு விட்டதாகவும் அன்றுமுதலே அவருக்குத் தாம் ஆத்மீக அடிமையாகி விட்டதாயும் சுவாமிகள் கூறுவார்.

செல்லப்பசுவாமிகள் பசியைப்பற்றியும் தாகத்தைப் பற்றியும் உறக்கத்தைப்பற்றியும் கவலைப்படாதவர். இருந்திருந்து எப்போதாவது தாமும் தமது குருநாதரின் மற்றும் சிஷ்யர்களும் சோற்றுக்கு உலைமூட்டிக் கொண்டிருக்கையில் செல்லப்பசுவாமிகள் அதனைக் காலால் தட்டிவிடுவாராம். 'உங்களுக்கெல்லாம் வயிறு நிரப்பும்எண்ணந்தான்' எனக் கூறி சிரிப்பாராம்

சிலநாளில் தமது குருநாதர் செல்லப்பா சுவாமிகள் பல மணிநேரங்கள் நிஷ்டையிலிருப்பாராம். அப்போதும் சிஷ்யர்களும் நிஷ்டையில் அமர்ந்து விடுவார்களாம், நிஷ்டை முடிந்ததும் செக்… …ர்களினுடைய… …நாம்வியின்… …தாம்எழுந்துவிட்டதைத்தம்

## ஏ. ஈ. தம்பர்

சிஷ்யர்களுக்குத் தெரிவிக்கும் அறிகுறியாக இச்சிரிப்பு அமையும். சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் என்ற திருவாசக வாக்கிற்கொப்பக் களிப்பும் சிரிப்புமாய் நிஷ்டை முடிவுறுமாம். இப்படியே நல்லூர் செல்லப்ப சுவாமிகளின் வாழ்க்கை பற்றி அகத்தே மகிழ்ச்சி பொங்க யோக சுவாமிகள் வர்ணிப்பார்

## காப்புலி ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எதிரியை நான் கமத்திற்கு போன நாள் முதல் தெரியும் நான்போனபோது அவர் அங்கு இக்கின்றார் கள்ளுவிற்கும் நேரத்தில் தான் கொட்டிலில் இருப்பேபாம்.

கடந்த வருடம்புதுவருடதினம்திற்குமுதல் நாள் காலை 6 மணிக்கு நான்வேலைக்குப் போனேன் 7-ம் வாய்க்காலில் சீவிப்போட்டு 10-ம் வாய்க்காலுக்கு சீவப்போனேன் நான் கள்ளு விற்பதில்லை சீவற்கள்ளை கொடுப்பேன் 7-ம் வாய்க்காலில் இராமலிங்கம் என்பவர் கள்ளு விற்பார். அன்று …பகல்… சாப்பிட்டேன் இரத்தினமும் சாப்பிட்டார் எவறுவெடும்சாப்பிடவில்லை அதன் பின் மூன்றரைமணிக்குப் போனேன் 10-ம் வாய்க்காலுக்குசயிக்கிலில் போனேன் இரவு 8 மணிக்கு வீட்டிற்குத்திரும்பினேன் எதிரி காப்புலி சந்தையரவை கொட்டனால் அடித்துக் கொண்டிருந்தார் ஏன் அடிக்கிறாய்? என்று நான் கேட்டதும் எதிரி கொட்டனை போட்டுவிட்டு ஓடிவிட்டார் எதிரிஎன்னுடன் வேலைசெய்யவில்லை அவர் என்கூட்டாளி என்னுடன் சாப்பிட்டுமிருக்கிறார்.

அன்று நான் சயிக்கிலில் வந்தேன் சயிக்கில் சட்போடவில்லை நல்லநிலவு வெளிச்சம் இருந்தது அடிச்சத்தம் கேட்டது என்னடா அடிக்கிறாய் என்றேன் அடித்ததைக்கண்டேன் சயிக்கிலுடன் கமத்துக்குள் வந்தேன் நான் கிட்டவந்ததும் எதிரி கொட்டனை போட்டுவிட்டு ஓடிவிட்டார் அந்தநேரத்தில் வேறு வெடும் இல்லை.

அடிச்சத்தம் தவிரவேறு சத்தம் கேட்கவில்லை இறந்தவர் சத்தம் போடவில்லை குளறவுமில்லை சிவல் கூடு என் இடுப்பில்லிருந்ததால் தான் எதிரியை துரத்தவில்லை எதிரி 2 அடி நலைப்பக்கத்தில் அடித்ததை கண்டேன் எதிரிக்கும் இறந்தவருக்கும் கோபதாபமிருந்தது பற்றி எனக்குத் தெரியாது இருவரும் என்கள்ளுக் கொட்டிலுக்கு வாரவர்கள் காப்புலி நல்லாய் கள்ளுக்குடிப்பவர் தினமும் குடிப்பார்

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது

மனோரமா பேசியபின் கூட்டத்தில் கலவரம் ஏற்பட்டதாக மனுதாரர் சாட்சியமளித்திருக்கிறார். ஆனால் அப்படிக் கலவரம் எதுவும் ஏற்படவில்லை என பாசேத்திரமும் இன்ஸ்பெக்டர் சிறிவர்த்தனவும் சாட்சியமளித்திருக்கின்றனர்.

நாராயணசாமி மேடையிலேறு 'கொல்லனையோ சேர் மனாக்கினாய்' என்று கூச்சலிட்டதாகத்தான் பாசேத்திரன் தனது குறிப்புப்புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார் ஆனால் மனுதாரரும், துரைசாமியும் ஜி ஜி பொன்னம்பலத்தைப் பற்றிப் பேசாதே என்று கூச்சலிட்டதாகக் கூறியுள்ளனர்.

இவற்றையெல்லாம் கொண்டு பார்க்கும்போது மனுதாரர் தான் எடுத்துக் கொண்ட குற்றச்சாட்டை தக்க சாட்சியங்களுடன் நிரூபிக்கவில்லை என்பதுதான் எனது வாதமாகும்.

(தொகுப்புரை தொடர்ந்து நடைபெறுகிறது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லீரல் அழற்சிக்குப் புது வாக்ஸீன் மருந்து

நியூயோர்க், ஏப் 4

கல்லீரல் அழற்சிவராமல் தடுக்க புதுவாக்ஸீன்மருந்து ஒன்றைக்கண்டுபிடித்திருப்ப தாக நியூயோர்க் பல்கலைக் கழகத்து மருத்துவ நிலையத் திலுள்ள ஆராய்ச்சியாளர் கள் அறிவித்துள்ளனர். கல் லீரல் அழற்சி கடுமையான நோய். உலகமளாவிய உடல் நலப் பிரச்னை இது.

ஒரு சில குழந்தைகளுக்கு மட்டுமே இந்த மருந்தைக் கொடுத்துச் சோதித்துப் பார்த்துள்ளதாகவும் வருங் காலத்தில் இந்த மருந்தைப் பரவலாகப் பயன்படுத்து வதற்கு முன்னர் இன்னும் விரிவான சோதனைகள் நடத்தவேண்டியிருக்கிறது என்றும், பொதுவாகப்பயன் படுத்துவதற்கு இது பத்திர மான மருந்துதான் என்று அத்தாட்சிதர மத்திய அரசு ஆலோசனை செய்வதற்கு முன்னர் இந்தச் சோதனை களை நடத்தவேண்டியது அவ சியமாகும் என்றும் அவர் கள் தெரிவித்தனர்.

இளம்பிள்ளை வாதம் இப் பொழுது வாக்ஸீன் மருந்து மூலம் கட்டுப்படுத்தப்படு கிறதல்லவா? அதேபோல் கல்லீரல் அழற்சியையும் கட் டுப்படுத்த இந்த வாக்ஸீன் பயன்படலாம்.

இவ்வாராய்ச்சிக் குழுவின் தலைவர் டாக்டர் குருக்மன் மருத்துவ நிலையத்தின் குழ ந்தைநோய்த்துறையின் தலை வருமாவார். அவர் இந்தக் கண்டுபிடிப்பை மார்ச் 23ம் தேதி அறிவித்தார். கல் லீரல் அழற்சி வைரசுஉள்ள குருதி நிணநீரைக் கொதிக்க வைத்து இந்த வாக்ஸீன் தயாரிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

கொதிக்க வைப்பதால், வைரசின் நோய் தொற்றச் செய்யும் ஆற்றல் அழிந்து போகிறது, ஆனால் நோய் எதிர்ப்புப் பொருள்களை உண்டுபண்ண ஊக்குவிக்கும் ஆற்றல் அழிவதில்லை

இந்த வாக்ஸீன் கண்டு பிடிப்பு காலத்திற்கேற்றது என்று கூறலாம். ஏனெனில் உலகம் நெடுகிலும் கல்லீரல் அழற்சி நோய் மிகவேகமா கப்பெருகிவருகிறது. இதற்கு ஒரு காரணம் குருதி செலுத் துவது அதிகமாகப் பயன் படுத்துவது, போதை மருந் துகளைப் பயன்படுத்துவோர் அசுத்தமான ஊசிகளைப் பயன்படுத்துவது. இன்னொரு காரணம், நோய் கண்டவர்களுடன்தொடர்பு அதிகமாக வைத்துக்கொள் வதாலும், துப்பரவு அற்ற நிலைமையினாலும் நோய் பரவுகிறது.

......

## சிரமதான மூலம் புதிய வீதி

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்திவு தண்ணீர் முறிப்பு பரிபாலன சபை யினரால் நடாத்தப்பட்ட சிரமதானத்தை வவனியா மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ் சிவஞானம் ஆரம் பித்துவைத்தார் இவ்விழா வில் முல்லைத்தீவு காரியாதி காரி திரு சொ கணேசநா தன் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு வி. யே அருள்நாயகம் ஆகி யோர் பங்குபற்றி ஊக்கு வித்தனர்.

தண்ணீர் முறிப்பில் கமம் செய்யும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் ஒன்றுகூடி ஒரு மைல் தூரமுள்ள றோட்டை சிரமதானத்தின் மூலம் செப் பனிட்டனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**திங்கள் 5—4—71**

(செய்திகள்: காலை6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்நற்சிந்தனை, 6-35 பக்திப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344மீ அன் 49 மீ**

பகல் 12-00 நண்பகல் இசை, 1-00 கதம்பஇசை.

**344 மீ அன்ட் 61 மீ**

மாலை 4-30 கல்விஒலி பரப்பு, 4-45 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக் கள், 5-15 ஒடிவிளையாடு பாப்பா, 5-45 கல்விச் சேவை.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 வயலின், 6-30 கிராமியப்பாடல்கள், 6-45 கண்ணகிகாவியம், 7-00 பிறநாட்டுத் தேசிய கீதங்கள், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 22-ம் திகதி (5-4-71)

மேடம்- வித்தையில் வெற்றிகாணும். வேண்டி யது கிடைக்கும். பொது மக்கள் தொடர்புடன் புகழ் வந்து சேரும்.

இடபம்- இதயத்தில் பூரிப்பு இன்பத்தின் சாய லுடன் இல்லறமும் சிறக் கும். கரும்புபோல் இனிக் கும் காரியங்கள் உண்டு.

மிதுனம்- அற்பவிடயத் திற்கும் ஆத்திரமடைவீர். நெருங்கிய நண்பர் ஒரு வரை பகைத்துக்கொள்ள நேரிடலாம்.

கடகம்- கண்களில் கனல் தெறிக்கும், கருத்தினில் கர்வம் தோன்றும். கொள் கையில் கோணலாலே குன் றிடும் புகழுந்தானே:

சிம்மம்- பேச்சுவன்மை யினால் பெரும் புகழ்சேரும். பெரியோர்களும் ஆசி கூறு வர். அரசியல்வாதிகள் அதிக செல்வாக்கைப் பெறு வர்.

கன்னி- வெளியிடத்துப் பயணம். வேதனையைத் தரலாம். வேண்டாத உறவு களைத் துண்டித்தல் நன்று

துலாம்- தகுதியில் முன் னேற்றமுண்டு தரமான வாழ்வும் கிட்டும். எதிரி கள் பணிவர். எதிலும் வெற்றியுண்டு.

விருச்சிகம்- நேர்முகப் பரீட்சைக்கு உகந்ததினம். தெய்வத்தின் அருள் தாராள மாகக் கிடைக்கும்.

தனுசு- தவறுகள் நடக்க லாம். நிலையும் தடுமாறும். நண்பர்களே காலைவாரி விடக் கூடும்,

மகரம்- காதலர்களுக்கு கனகுஷியான தினம். பெற் றோர்களின் ஆதரவு கிடைக் கும். சிநேகிதர்களால் தொல்லையுண்டு.

கும்பம்- வசதிகள் பெரு கும். மேலிடத்து ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். கல்வியில் முன்னேற்ற முண்டு.

மீனம்- வியாபாரத்துறை யில் விருத்தியுண்டு. செய் தொழில் சிறப்படையும். வாழ்க்கையில் சமுகமான நிலை தென்படும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## ஒரே நாளில் ஒரே பாதையில் இரு விபத்து

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முன்பாகவுள்ள வீதியைக் கடக்கமுயன்றஒரு சிறுவன் மோட்டார் கார் ஒன்றுடன் மோதுண்டு சிறு காயங்களுடன் யாழ்ப்பா ணம் அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். பிற்பகல் அதே தினத்தில் அதே வீதியில் வழக்கம்பரை அம்மன் கோவில் முன்பாக இ. போ. ச. பஸ்வண்டியைப் பின் தொடர்ந்து சைக்கிளில்வந்து கொண்டிருந்த ஒருவர் வண்டி நிற்பாட்டும்போது முன்னேற முயலுகையில் எதிரே வந்த லொறி ஒன்று டன் மோதப்பட்டு பலத்த காயத்துக்குள்ளாகியதுடன் சைக்கிளும் பலத்த சேதத் துக்குள்ளாகியது. காய மடைந்தவர்பிரஞ்ஞையற்ற நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

......

## உரை

யாழ்ப்பாணம், திங்கள்

வல்வை வைத்தீஸ்வரன் கோவில் உற்சவத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பி ரான் சுவாமிகள் நடாத்தும் திருவிளையாடல் புராண விரிவுரையில் ''இந்திர கர்வ பங்கம்'' எனும் பாகம் நடைபெறும்.

### "ஒழுங்கும் கட்டுப்பாடும்


## விளையாட்டின் மூலம் பரப்ப தவறிவிட்டோம்"

### — வட, கல்வியதிபதி

சுழிபுரம், ஞாயிறு

''பிள்ளைகள் விளையாட் டுக்களின் மூலம் கற்றுக் கொண்ட ஒழுங்கும் கட்டுப் பாடும் விளையாட்டு மைதா னத்தில் மாத்திரமன்றி வகுப்பறைகளிலும், வீடு களிலும், கிராமங்களிலும் சமுதாயத்திலும் பிரதிபலிக் கக்கூடியதாக இருக்கவேண் டும். இளமையில் கற்றுக் கொண்ட இந்த விளையாட் டுத்திறன் வாழ்க்கை முழு வதும் நின்று நிலைக்கும், ஒற்றுமையையும் முன் னேற்றத்தையும் ஏற்படுத் தக்கூடிய ஒருநிலையை விளை யாட்டின் மூலம் ஆக்கிக் கொள்ளலாம்'' என சுழி புரம் விக்ரோறியாக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற வட்டாரக் கனிஷ்டபிரிவுப் பாடசாலை களின் விளையாட்டுப்போட்டி யில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற் றிய வடமாநிலக்கல்வி அதிபதி திரு. டபிள்யூ. டி. சி. மாதந்தில குறிப் பிட்டார்.

கல்வி அதிபர் தொடர்ந்து பேசுகையில், பிள்ளைகள் தமது சிறுவயதுதொடக் கமே விளையாட்டுகள், போட்டிகள் மூலம் ஒழுங் கும் கட்டுப்பாடும் கற்க வேண்டியது அவசியமென் றும், இன்று நமது நாட் டின் நிலைமையை நோக்கும் போது விளையாட்டுத்துறை மூலம் ஒழுங்கையும் கட்டுப் பாட்டையும் நாம் இது வரை பரப்பாமல்விட்டது தெரியவருகிறதென்றும் சொன்னார். வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப. சச்சிதானந்தனால் போட்டி ஒழுங்குகள் கவனிக்கப்பட் டிருந்தன. விக்டோறியாக் கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில் களை வழங்கினார். விளை யாட்டுக் குழுக் காரியதரிசி திரு. நா. பொன்னையா நன்றிதெரிவித்துப் பேசி னார்.





உங்கள் மண் பொன் விளையும் பூமியாக வளம் பெற...

சுமார் முக்கால் நூற்றூண்டு காலமாக இலங்கையின் விவ சாயத் துறைக்கு அதி சிறந்த உர வகைகள், விவசாய ரசாயனப் பொருள்கள், தெளி கருவிகள் ஆகியவற்றை வழங்கி, இலங்கை மக்களின் காணி பூமிகளை வளமாக்கி, அவர்கள் அதிக விளைச்சலையும் அபரிமித இலாபத்தையும் பெறத் துணை நின்று வரும் முன்னோடி ஸ்தாபனம் பவர்ஸ். நீங்களும் உங்கள் மண்ணை வளமாக்கி செழிப்பான விளைச் சலைப் பெற பவர்ஸ் பொருள்களையே பாவியுங்கள்.

ஏ.பவர் அன் கொம்பனி லிமிடெட்
த. பெ. இல. 11. கொழும்பு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நீர்வேலி கந்தசுவமி கோவிலின் திருக்குளத்துக்குத் தென்பால் அமைக்கப்பட்ட புதிய மண்டபத்தில் பழனியாண்டவர் பிரதிஷ்டை செய்யப்படும்பொழுது எடுக்கப்பட்ட படம். படம் : சித்திராலயா

## முதல் தடவையாக வடபகுதியும் கலந்துகொண்டது

பாசுக்குதித்துறை, ஞாயிறு

அண்மையில் அனுராதபுரம் மகாபோதி ஆலயத்தில் நடந்த அட்டமஸ்தான பூசையிற் கலந்துகொண்ட வடபகுதிப் பயிர்ச்செய்கைக் குழுவுக்குவடபகுதிப்பெரும்பாக அதிகாரி திரு. சோ. தி. சம்பந்தமூர்த்தியும் வடமாகாண பயிர் செய்கைக் குழுச் சம்மேளனச் செயலாளர் திரு. சி. மூ. மார்க்கண்டுவும் தலைமைதாங்கினர். இலங்கை வரலாற்றில் முதன் முதலாக வடபகுதி இந்துமக்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டமை இதுவே முதல் தடவையாகும் விவசாய நில அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. மகிந்தா சில்வா வடபகுதிப் பிரதிநிதிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

......

### சொற்பொழிவு

அரியாலை, திங்கள்

திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இம்மாதம் எட்டாந் திகதிகோயம்புத்தூர் முன்னூள்நீதிகதிநா. கிழ ஞாரி பிரசாத்தின் சொற்பொழிவு நடைபெறும்.

# திருமலைச் செய்திகள்

### வைத்தியசாலை மேற்பார்வையாளர்

தம்பலகாமப் பகுதி வைத்தியசாலைப்பகுதி மேற்பார்வையாளராக திருமதி செல்லக்கண்டு சித்திரவேலு சுகாதாரப் பகுதியினரால் நியமிக்கப்பட்டுள்ளார். நியமனம்பெற்ற இவர் சிறந்த சமூகசேவையாளர் என்பது குறிப்பிடத் தக்கது.

### புதிய நிர்வாகிகள்

திருமலை ஸ்ரீ சண்முக வித்தியாலய பெற்ருர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: இ விஸ்வலிங்கம் உபதலைவர்: டாக்டர் க. சு. சித்திரவேல். செயலாளர் இராஜேஸ்வரசிங்கம் தனுதிகாரி சரஸ்வதி சுவாமிநாதன். நிர்வாகக்குழுவில் 5பேர் இடம்பெற்றுள்ளனர்.

### பற்றுக்குறை

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தமிழாசிரியர் பற்ருக்குறை அதிகமாக உள்ளது. இருநூறு காலியிடங்கள் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. இதனுல் மாணவர்களின் கல்வி முன்னேற்றம் தடைபடுவது அறியப்படுகிறது.

### நூல் அறிமுகவிழா

கடந்த சனிக்கிழமை திருமலை இந்துக்கல்லூரி மண்டபத்தில் 'இஸ்லாம் காட்டும் ஆரோக்கிய வாழ்வு' என்னும் நூலின் அறிமுகவிழா சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவுக்கு வழக்கறிஞர் திரு ஓ. எல் எம். இஸ்மைல் தலைமை தாங்கினர். திருமலை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு மா. நேமிநாதனும் நகரசபைத் தலைவர் திரு வி. தம்பிஜயாவும் பாராட்டுரை வழங்கினர். புலவர் சிவசேகரனர் புலவர் சோமாஸ்கந்தர், திரு இரசஜகோபால் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

### கற்பூர உற்சவம்

திருமலை ஸ்ரீ ஆதி பத்திரகாளியின் அருள்வேண்டி எண்ணற்ற சைவஅன்பர்கள் வெள்ளிக்கிழமையன்று அம்பாள் வீதிவலம் வருகையில் கற்பூரசட்டி ஏற்றிதம் நேர்த்தியை நிறைவேற்றினர்.

உதைபந்தாட்டம்

## இரேக்க கோஷ்டியை மகாஜனு கோஷ்டி வென்றது

மாவிட்டபுரம், ஞாயிறு

இரேக்க உதைபந்தாட்டக்கோஷ்டியை தெல்லிப்பளை மகாஜனு பழைய மாணவர் கோஷ்டி வெற்றி பெற்றது.

காங்கேசன்துறை யங்ரோயல் விளையாட்டுக்கழகத்தால் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிமைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

போட்டி ஆரம்பமாகி 5 நிமிடத்தில் மகாஜனு வீரர் பி. ராஜகாந்தன் ஒரு கோலைப்போட்டார், இடைவேளைக்கு முன் ஐந்து நிமிடம் இருக்கையில் மகாஜனு வீரர் மோகனராம் ஒரு கோலைப் போட்டார்.

இடைவேளையின் போது இரேக்க கோஷ்டி ஒரு கோலும் போடவில்லை இடைவேளையின் பின் போட்டி ஆரம்பமானதும் இரேக்ககோஷ்டி வீரர்கள் புதிய உத்வேகத்துடன் ஆடி அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டனர். இக்கோல்களை இரேக்க வீரரான மார்க் கோனி யன்சார் ஆகியோர் போட்டனர்.

போட்டி முடியும்வரை இருதரப்பினரும் மிகவும் சிறப்பாக ஆடினர்கள் மகாஜனு வீரர்கள் எத்தனையோ கோல்களைப்போட முயன்றபோதும் இரேக்க பின்னணி வீரர்களின் திறமையால் தடுக்கப்பட்டது

இறுதியில் மகாஜனு 3-2 கோலால் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு திரு. எஸ் தனபாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

......

### மட்டக்களப்பில் வித்தியானந்தனுக்கு புகழ்மாலை

மட்டக்களப்பு, ஞாயிறு

தமிழின் மறுமலர்ச்சியில் பாரதியாருக்கு, பம்மல் சம்பந்த முதலியாருக்கும், புதுமைப்பித்தனுக்கும்எத்தகைய முக்கியத்துவம் உண்டோ அத்தகைய முக்கியத்துவம் ஈழத்துப்பேராசிரியர் திரு. சு. வித்தியானந்தனிக்கும் இருக்கிறது.'

இவ்வாறு மட்டக்களப்பு தமிழ் கலாமன்றத்தின் ஒன்பதாவது ஆண்டுநிறைவு விழாவில் கிழக்குப்பிராந்திய வித்தியாதிபதி ஜனுப் எம். சமீம் பேராசிரியர் திரு. வித்தியானந்தனைப் பாராட்டிப்பேசுகையிய் குறிப்பிட்டார்,

இந்த ஆண்டுவிழாவில் நாட்டுக்கூத்துத்துறையில் பேராசிரியர் சு. வித்தியானந்தனும், கர்நாடக இசைத்துறையில் சங்கீத பூஷணம் என் இராஜூவும் ஆற்றிய தொண்டுகளைப் பாராட்டி தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன. இவற்றை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம், டபிள்யூ எஸ். குணரத்னு வழங்கினர்.

இவ்விழாவை மட்டக்களப்பு மேயர் திரு. க தியாகராசா மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார் இவ்விழாவில் மட்டக்களப்பு அரசினர் கல்லூரி அதிபர் திரு. பொன் சின்னத்துரை மட்டக்களப்பு பிரதம கல்வி அதிகாரி திரு. க. சிவநாதன், ஆகியோர் உரைநிகழ்த்தினர். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

......

### மணல் திருட்டு

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் திருவடி நிலை கடற்கரையில்பட்டப்பகலில் மணல்துணிகரமாக வண்டி வண்டியாகக் கொண்டுசெல்லப்படுகிறது. கடலில் குளித்துக்கொண்டு நின்ற பலர் கூப்பாடு போட்டும் மணல் அள்ளியவர்கள் எவ்வித பயமும் இல்லாமல் அள்ளிச் செல்கின்றனராம்.

## மரம்வளர்க்கும் திட்டம்

கோட்டை, சனி

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நாட்டில் மரம் வளர்ப்புத் திட்டங்களை தயாரித்துவருகிறது இதன்படி அலவத்தை, பெலமதுளை, ரத்தினபுரி, நுவரெலியா போன்ற இடங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்படும் இத்திட்டங்களுக்காக காடுகளுக்கூடாக 30 மைல் நீளப்பாதைபோடப்படும் இத்திட்டங்களால் இப்பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் 7 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

இலங்கை மரக் கூட்டுத்தாபனத்தலைவர் திரு ஐ. பி. பலிபான அலவத்தைத் திட்டத்தைப் பார்வையிடவுள்ளார்.


## மற்றும் 10,403 நைலக்ஸ் சாறிகள் ஏப்ரல் 6-ந் திகதிய சீட்டிழுப்பில்

### சிங்கள — தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு

தேசிய லொத்தர் சபை வழங்கும் இறக்குமதி செய்யப்பட்டு உள்ளூரில் அச்சடி செய்த 6 யார் X45 அங்குல நைலக்ஸ் சாறிகள் குறைக்கப்பட்ட விலையில் ரூபா 49-50 க்கு விஷேட பரிசுகளாகக் கிடைக்கும்.

**இன்றே ஒரு சுவீப் ரிக்கற் வாங்கி மற்றுமோர் நைலக்ஸ் சாறியைப் பரிசாகப்பெறுங்கள்.**

விபரங்கள் இதோ! 6-4-71-ல், கொழும்பு-3. காலி வீதி 502/1 இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபைக் காரியாலத்தில் நடை பெறவுள்ள இல. 342 வது சுவீப் சீட்டிழுப்பில் பரிசுபெறும் டிக்கட்டுகளை வைத்திருக்குக்கும் ஒவ்வொருவருக்கும் உள்ளூரில் அச்சடிசெய்த 6 யார் X45 அங்குல இறக்குமதி செய்த நைலக்ஸ் சாறிகள் ஒன்று ரூபா 49-50-க்கு வழங்கப்படும்.

பரிசுபெறும் டிக்கெட் உட்பட அவற்றைச் சார்ந்த தொடருள்ள நூறு டிக்கெட்டுகளை வைத்திருக்கும் ஒவ்வொருவரும் ரூபா 49-50 செலுத்தி ஒரு சாறியைப் பெற்றுக்கொள்ளலாம். உதாரணமாக. பரிசுபெறும் டிக்கெட் 10 B 0160 ஆயின் 10 B 0101 லருந்து 10 B 0200 (10 B 0160 தவிர) வரையுள்ள எல்லா டிக்கெட்டுகளுக்கும் ரூபா 49-50-க்கு ஒரு சாறி தரப்படும். டிக்கெட் இல. 10 B 0160க்கு 2 சாறிகள் வழங்கப்படும்.

பரிசு பெறும் டிக்கெட்டுகளை கொழும்பு 'காலிவீதி' 502/1 இலக்கத்திலுள்ள தலைமைக் காரியாலயத்தில் அல்லது பின்வரும் முகவரியிலுள்ள எமது தேசிய லொத்தர் சபை பிராந்தியக் கந்தோர் ஒன்றில் சமர்ப்பிக்கலாம்.

| | | |
|---|---|---|
| இல. | 113 பொதுச் சந்தை இடம் புதிய நகர் | அனுராதபுரி |
| ,, | 66 & 68 பஸார் வீதி | பதுளை |
| ,, | 131 கொட்டுகொடல்ல வீதி | கண்டி |
| ,, | 10 புத்தளம் ரோட் | குருநாகல் |
| ,, | 23 திருகோணமலை வீதி | மட்டுநகர் |
| ,, | 2 காமினி மாவத்தை | காலி |
| ,, | ஹேமச்சந்திரா கட்டிடம், புரோட்வே ரோட் | மாத்தறை |
| ,, | 59 F பண்டாரநாயக்கா மாவத்தை | இரத்தினபுரி |

ரொக்கமாக ரூ. 49-50 செலுத்தும் போது ஒவ்வொரு இறக்குமதி செய்யப்பட்ட நைலக்ஸ் சாறிக்கும் ஒரு வவுச்சர் வழங்கப்படும். அப்படிப்பட்ட சாறிகளை கீழ்காணும் — "லங்கா சலுசல லிமிட்டெட்டின்" விற்பனைச் சாலைகளில் தெரிவு செய்துகொள்ளலாம்.

**லங்கா சலுசலவின் மொத்தவிற்பனை நிலையங்கள்**

93, ஜாவத்தை ரோட், கொழும்பு-5, B-7, மார்க்கெட்பிளேஸ், அனுராதபுரம். 84 A, புவாக்கொடமுல்ல, மையங்கனைரோட், பதுளை, 'சுமணகிரி' உனவத்துன்ன, காலி. 907/2, பேராதனைரோட் கண்டி. 332 தெலியகொன்ன, கண்டிரோட், குருநாகல், சாய்ந்தமருது தமிழ் டிவிஷன். ஸாகிரா கல்லூரி எதிரில், பவுண்டரி ரோட்டு, கல்முனை. 8 மகாத்மாகாந்தி ரோட், யாழ்ப்பாணம். 6, பண்டாரநாயக்க மாவத்தை. இரத்தினபுரி, 'டேர்பி ஹவுஸ்', ஹட்டன்,

**பதிவு செய்யப்பட்ட சலுசல விற்பனையாளர்கள்**

கார்கில்ஸ் (சிலோன்) லிமிட், யோர்க் வீதி, கொழும்பு. மில்லர்ஸ்லிமிட் யோர்க் வீதி கொழும்பு. செல்லமுத்து சிவநாதன் அன் கம்பெனி 130, 2-ம் குறுக்குத் தெரு, கொழும்பு, ஸ்ரீ ரம்யா ஸ்டோர்ஸ், 151, 2-ம் குறுக்குத்தெரு கொழும்பு, ஸ்ரீ ரம்யா ஸ்டோர்ஸ் 502, மருதானை ரோட், கொழும்பு டானிபிரதர்ஸ், 508 மருதானை ரோட் கொழும்பு மௌலானு (சிலோன்) லிமிட் 478, மருதானைரோட், கொழும்பு. எம். டி. மெண்டிஸ் அன் சன்ஸ் லிமிட், 134 கெயிஸர் வீதி, கொழும்பு. ஸல்பில' 185, ஒல்கொட் மாவத்த, கொழும்பு கொடகம லிமிட். 422 காலி வீதி, கொள்ளுப்பிட்டி. வெள்ளவத்தை இல 1, கூட்டுறவு சங்கம் காலிவீதி கொழும்பு, டிக்கோயா—கார்கில்ஸ் (சிலோன்) லிமிட், ஹப்புத்தளை— எம் எச் கொர்னெலிஸ்சில்வா அன் சன்ஸ் இவசுமா கட்டிடம் கண்டி -- கார்கில்ஸ் (சிலோன்)லிமிட். பாணந்துறை--எம். டி. குணசேன அன் கொம்பனிலிமிட் ஜனப்பிறிய மாவத்த நுவரெலியா--கார்கில்ஸ் (சிலோன்) லிமிட் நீர்கொழும்பு. நிலாநி 25, ராஜபக்ஷ புரோட்வே--சரசிவி, மீமெகம கட்டிடம் ராஜபக்ஷ புரோட்வே. கம்பஹா எம். டி. குணசேன அன் கொம்பனிலிமிட், சுதர்சன கட்டிடம், யாஎல ரோட்.

## தேசிய லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கிட விரும்பவில்லை, ஆனால்

# அண்டை நாட்டு சம்பவங்களை பார்த்துக் கொண்டிருக்க முடியாது

## திருமதி காந்தி கூறுகிறார்

புதுடில்லி, ஏப்ரல் 4

"இந்தியா வேறு எந்த நாட்டின் உள்விவகாரங்களிலும் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால் அண்டை நாட்டில் இடம்பெறும் அட்டூழிய சம்பவங்கள் குறித்து நாம் பேசாமல் இருக்கமுடியாது"

இவ்வாறு இன்று முடிவடைந்த அகில பாரத காரியக் கமிட்டிக் கூட்டத்தில் உரைநிகழ்த்துகையில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறினார்.

கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறும் சம்பவங்கள் உலகம் முழுவதிலும் எதிர் விளைவுகளை ஏற்படுத்தவே செய்யும். அப்பாவி மக்கள் இவ்வாறு அடித்து நொறுக்கப்படுவதைத் தொடர்ந்து அனுமதிப்பதா என்பது பற்றி உலக நாடுகள் ஆலோசிக்கவேண்டும் என்றும் திருமதி காந்தி குறிப்பிட்டார்.

மேலும் திருமதி காந்தி பேசுகையில் இந்தியாதனது அண்டைநாட்டில் அக்கிரமங்களும் படுகொலைகளும் நடப்பதைப் பார்த்துக் கொண்டு மௌனம் அனுஷ்டிப்பது உகந்ததோ சாத்தியமோ அல்ல. எந்தவொரு நாட்டின் உள்விவகாரங்களிலும் இந்தியா தலையிடாத போதிலும், மக்கள் துன்புறுத்தப்படுவதை நிறுத்தவும் குடியேற்ற ஆதிக்க ஆட்சிக்கு எதிராகவும், சுதந்திரக் குரல் எழுப்புபவர்களுக்காகவும் தன் ஆதரவைத் தெரிவிப்பதோடு அதற்காகப் பாடுபட்டும் வந்திருக்கிறது.

இவ்விதமாக் ஆக்கிரமிப்புக்கு எதிராய் வாய்திறந்து பேசாத உலகநாடுகளைப் பேசும்படிசெய்ய இந்தியா பாடுபட்டு வருகிறது என்றார்.

இதற்கு முன்பு கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் நடத்தி வரும் விடுதலைக் கோரிக்கைக்கு முழு ஆதரவும் பரிவும் தெரிவிக்கு தீர்மானம் ஒன்றையும் கமிட்டி நிறைவேற்றியது ஏற்கனவே இந்திய ஆட்சிமன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தின் டிப்படையில் இத்தீர்மானம் அமைந்துள்ளது

வங்காள தேசத்தை அங்கீகரித்து அந்நாட்டுக்கு இந்தியா உதவவேண்டும் என்றும் பல அங்கத்தவர்கள் கமிட்டியில் வற்புறுத்தினார்கள், அப்படி இல்லையென்றால் வெறும் தீர்மானம் நிறைவேற்றுவதென்றால் எதுவித அர்த்தமுமில்லை என்றும் அவர்கள் வற்புறுத்தினார்கள்.

இத்தீர்மானத்தின் மீது வெளிநாட்டமைச்சர் திரு. சுவர்ண்சிங் பேசுகையில் வங்காள தேசத்தை அங்கீகரிக்கும் விஷயம் அரசாங்கத்தின் கவனத்தில் எப்பொழுதும் இருந்துவருகிறது எதற்கும் தக்கதருணம் வரவேண்டும் என்று குறிப்பிட்டார் வங்காள தேச மக்கள் நமது சகோதரர்கள். எனவே அவர்கள் விஷயத்தில் பாரதத்துக்கு அதிக அக்கறை உண்டு என்ற திரு. சுவரண் சிங் மேலும் பேசுகையில், பாகிஸ்தான் இராணுவத்தின் அடிமட்டமான, காட்டுமிராண்டித் தனமான ஆக்கிரமிப்பைக் கண்டியாதிருக்க முடியாது. கிழக்குவங்காள மக்கள் செய்த ஒரே குற்றம், அவாமிலீக்கின் கொள்கையை ஏற்று தங்கள் ஒருமைப்பாட்டைத் தெரிவித்ததுதான் என்றார்.

கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்கு எவ்வாறு உதவி புரியலாம் என்பது பற்றி ஆராய்ந்து முடிவெடுப்பதற்கென காங்கிரஸ் தலைவர் திரு சஞ்சீவையா தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது

கமிட்டியின் முதல்நாள் கூட்டத்தில் திரு. சஞ்சீவையா காங்கிரஸ் மகா சபையின் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார் அவர் பெயரை முன்னாள் தலைவர் திரு. ஜகஜீவன் ராம் பிரேரித்தார்

### கப்பலில் குழப்பம்

பாகிஸ்தான் கடற்படைக் கற்பல் கிழக்குப் பாகிஸ்தானுக்கு வரும்வழியில், அக்கப்பலில் பெரும் குழப்பம் ஏற்பட்டதாகவும் அக்கப்பலில் வேலை செய்யும் பாகிஸ்தானியருக்கும் கிழக்கு வங்காளத்தினருக்குமிடையே மோதல் ஏற்பட்டதாகவும் இதுசுமார் 7 மணிநேரம்நடைபெற்றதாகவும் இன்னொரு செய்தி தெரிவித்தது.

---

கொமாண்டோக்களுக்கு எதிரான

## கடுமையான போக்கு தொடர்ந்து இருக்கும்

கெய்ரோ, ஏப். 4

பாலஸ்தீனகொமாண்டோக்களுக்கு எதிரான கடுமையான போக்கைதொடர்ந்து கடைப்பிடிப்போம் என்று ஜோர்டான் மன்னர் ஹுசேன் அறிவித்திருக்கிறார். ஜோர்டானின் பாதுகாப்பின் மீது எவருடனும் பேரம் பேசுவதற்குத்தாம் தயாராய் இல்லையென்றும் அவர் தெரிவித்தார் ஜோர்டானை தனிப்படுத்திவிடுவதற்கு முயற்சிகள் நடப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் கடந்த சில தினங்களாக ஜோர்டானிய அரசுப் படைகளுக்கும் பாலஸ்தீனக் கொமாண்டோக்களுக்குமிடையில் நடைபெற்று வரும்மோதல்கள் பற்றி ஆராய்வதற்காக இன்று கெய்ரோவில் அரபு நாடுகளின் பிரதிநிதிகள் கூடுகிறார்கள்.

---

## "இளைஞர் பிரச்னை தீர்க்காவிட்டால்."

பருத்தித்துறை, ஞாயிறு

இன்றைய பிரச்னைகளுடன் பூதாகர்ரமாக அனைத்துலக அரசாங்கங்களையும் ஆட்டம்கொடுக்கக் கூடியளவுக்கு வளர்ந்து வியாபித்து வருவது இளைஞர் பிரச்னை. இப்பிரச்சினை சுமுகமான முறையில் தீர்க்கப்படாவிடின் இன்றையசமுதாயக் கட்டுக்கோப்பைப் பாதுகாக்க முடியாது திணற வேண்டிய நிலைமை உருவாகலாம்."

இவ்வாறு வண ஜி. ரி. பாலசுந்தரம் அச்சுவேலி அர்ச் திரேசா மண்டபத்தில் இருநாட்கள் தொடர்ந்து நடைபெற்ற கத்தோலிக்க மறைக் கல்வி கருத்தரங்குக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்துவான் எஸ் அடைக்கலமுத்துவும் பேசினார், திரு அகஸ்தீன் பொன்ராசன் நன்றியுரை கூறினார்.

---

## யுவதி தற்கொலை

கொடிகாமம், ஞாயிறு

மிருசுவில் பெண்கள் குடிவேற்றத்திட்டத்தைச் சேர்ந்த செல்வி எஸ். உமாதேவி திருமிநாசினியருந்தித் தற்கொலை புரிந்துகொண்டார். மரணவிசாரணையின் போது இறந்தவரால் எழுதப்பட்ட கடிதமொன்று கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

......

## தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

சுன்னாகம்ஐயனார்கோவிலை அப்பகுதிசிறுபான்மைத் தமிழர்களின் வழிபாட்டுக்குத் திறந்துவிட்டமைக்காகமேற்படி ஆலய பரிபாலன சபையினருக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானம் கோப்பாய் தெற்குசூரியோதயசனசமூக நிலையச்செயற்குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

---

## தோல் புற்றுநோய்க்கு மருந்து

நியுயோர்க், ஏப்ரல் 4

தோல்புற்றுநோய்க்கு மிகவும் அரிதான ஒரு மருந்தை அமெரிக்க டாக்டர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார். கடந்தயுத்தகாலத்தில் உபயோகிக்கப்பட்ட விஷவாயுக்களிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு ரசாயனக் கலவையைக் கொண்டு இந்த மருந்து கண்டுபிடிக்கப் பட்டதாகத் தெரிகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில்சுமார் 30 தோல் நோயாளர்களை இவர் குணப்படுத்தியிருப்பதாகச் சொல்கிறார்.

---

## இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 15ம் திருவிழாவாகிய இன்று காலைவிசேஷ அபிஷேகமும், வண்ணை எஸ். ஆர். எஸ், சுந்தரம்கோஷ்டியினரின் நாதஸ்வர இசையும் மாலையில் "கவுணியர்கோனுக்குப் பல்லக்கு' என்னும் பொருள்பற்றி திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகத்தின் கதாப்பிரசங்கமும் இரவு 8-30 மணிக்கு செல்விகள் ராஜலெட்சுமி கனகசபாபதி பாப்பா கனகசபாபதி ஆகியோரின் பண்ணிசைக் கச்சேரியும் விசேஷ மேளக்கச்சேரியும் இடம்பெறும்.

---

# தினேஷ்பூரில் கடுஞ்சண்டை

# இந்தியா அகதிகளுக்கு உதவி

புதுடில்லி, ஏப், 4

கிழக்கு வங்காளத்திலுள்ள தினஷ்பூர் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்திற்கும் முஜிபுர் ஆதரவுப் படைகளுக்குமிடையே கடும் சண்டை தொடங்கியிருப்பதாக எல்லையோரங்களிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்ததாக இந்திய வானொலி தெரிவித்தது

பாகிஸ்தானிலுள்ளகடேற் பகுதியினரை உடனடியாக கடற்படையில் சேருமாறு பாகிஸ்தான் வானொலியின் டாக்கா கேந்திரம் அறிவித்தது டாக்கா அல்லது சிட்டகாங்கிலுள்ள கடற்படைப் பிரிவில் உடனடியாகச் சேர்ந்துகொள்ளுமாறு இவர்கள் கோரப்பட்டுள்ளனர்

### உண்ணாவிரதம்

புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் ஸ்தானிகரின் இல்லத்தின்முன் 16 அகாலித்தளத் தொண்டர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர். கிழக்கு வங்காளத்தில் பாகிஸ்தான் துருப்புகளின் அட்டூழியங்களை நிறுத்தி அங்கு அமைதி நிலவச்செய்யுமாறு பாகிஸ்தான் அரசை அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். இதனை வற்புறுத்தவே அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்

### அகதிகளுக்கு உதவி

கிழக்குவங்காளத்திலிருந்து இந்தியாவுக்கு வரும் அகதிகளுக்கு சாத்தியமான எல்லாவித உதவிகளும் அளிக்கப்படுமென மேகாலியா கவர்னர் அறிவித்துள்ளார். இவர் எல்லையோரப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்த பின்பே இவ்விதம் அறிவித்துள்ளார். பெண்களும் குழந்தைகளுமாக 200 அகதிகள் மேகாலியாவுக்குள் வந்ததாகவும் அவர்களில் முஸ்லீம்கள் இந்துக்கள் பார்சிக்காரர்களும் இருந்தனர் எனவும் அச்செய்தி தெரிவித்துள்ளது

......

## நாவலர் ச. ச. நி. நிர்வாகிகள்

நெல்லியடி, ஞாயிறு

உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலையத்தின் 21-வது ஆண்டுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர் திரு இ வி செல்வரத்தினம் உபபோஷகர் திரு வி சுந்தரம் தலைவர் திரு க கனகரத்தினம் உபதலைவர் திரு க நாகமணி செயலாளர் திரு எஸ் கே குலசிங்கம் உபசெயலாளர் திரு வே செல்லத்துரை பொருளாளர் திரு கி தவம் உபபொருளாளர் திரு க நடேஸ் 15 பேர் கொண்ட குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டதோடுசிறுவர் முன்னேற்றக்கழக நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

......

## யுனைட்டட் வெற்றி

அம்பன், வெள்ளி

வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி பிரிவு மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியில் கோல்டன் பினாசுக்கும் பருத்தித்துறை யூனயிற்றட்டுக்கும் நடைபெற்ற போட்டியில் யுனைட்டட் வெற்றியீட்டியது.

---

# 'காப்புலி கந்தையா தினமும் காலைமாலை கள்ளுகுடிப்பார்'

## உருத்திரபுரம் கொலை வழக்கு

யாழ்ப்பாணம், திங்கள்

'இறந்தவரான காப்புலி கந்தையா ஒரு வேட்டைப் பிரியர் அதனால்தான் அவரை காப்புலி என்றும் அழைக்கின்றனர் என நான் நினைக்கிறேன் அவர் தினமும் நல்லாய் கள்ளுக்குடிப்பார் காலை 1 அல்லது 2 போத்தலும் மாலையில் 3 அல்லது 4 போத்தல்கள்ளும் குடிப்பார் சம்பவம் நடந்த இடத்தில் அவருக்கு பக்கத்தில் ஒரு போத்தலில் மூன்றரை போத்தல் கள்ளுகிடந்தது'

உருத்திரபுரம் கொலை வழக்கில் சாட்சியமளித்த அ செல்லையா மேற்கண்டவாறு கூறினார் இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் விரமந்திரி முன்னிலையில் நேற்று விசாரணை ஆரம்பமானது.

இவ்வழக்கில் உருத்திரபுரம் 70-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதி காப்புலி கந்தையாவை கொலை செய்ததாக சின்னையா கந்தசாமி என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிக்காக [illegible] தால் அட்வகேட் [illegible] பாலேந்திரா [illegible] பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் சந்திரசேகரா ஆஜரானார்.

செல்லையா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது அந்தக் சமதியில் எதிரியும் தகப்பனும் ஒரு கொட்டிலில் இருக்கின்றனர் நானும் இரத்தினமும் மற்றொரு கொட்டிலில் இருக்கின்றோம் காப்புலிகந்தையாவும் மனைவியும் இன்னொரு கொட்டிலில் இருக்கின்றனர் கமச் சொந்தக்காரர் கொஞ்சத்தூரத்தில் இருக்கிறார் வேறு ஒருவரும் இல்லை கமச்சொந்தக்காரர் பெயர் தெரியாது அவர்

(5-ம் பக்கம் பார்க்க)

---

இச் சஞ்சிகை "ஈழநாடு" லிமிடெட் விதரணத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரேன்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 5-ந் உ வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org